வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 06
10.05.2025 சனிக்கிழமை
இதழ் : 131
பக்கங்கள் : 12




## தமிழ் அரசியல் கைதிகளை அரசு விடுவிக்க வேண்டும்!

### கஜேந்திரகுமார் எம். பி.

கொழும்பு, மே 10

பயங்கரவாத தடைச் சட்டத்தை மிகமோசமான சட்டமாக இந்த அரசாங்கம் ஏற்றுள்ளபோதும் அந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துகிறது. இது நியாயமற்றது. பல ஆண்டுகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் கணக்காய்வு

11

## எனது உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம்

### பாராளுமன்றில் கூறிய தயாசிறி

கொழும்பு, மே 10

ஒருசில பொலிஸ் அதிகாரிகள் பணத்துக்காக பாதாள உலகக் குழுக்களுக்கு தகவல்களை வழங்குகின்றனர். சிலர் பாதாள உலகக் குழுக்களை பாதுகாக்கின்றனர் - போதைப்பொருளையும் பாதுகாக்கின்றனர். சிறைச்சாலையிலுள்ள அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. படுகொலைகள் தற்போது நாளாந்த செயலபாடாக மாறியுள்ளன. இதனை பாராளுமன்றத்தில் குறிப்பிடுவதால் எனது உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம் - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்

11

## மன்னாரில் மதுபானசாலை அமைக்க ரூ.8 கோடி லஞ்சம்!

### முறையிட ரிஷாத் எம். பிக்கு அமைச்சர் அறிவுரை

கொழும்பு, மே 10

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் மன்னாரில் மதுபானசாலை அமைப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதாகவும் இதற்கு 8 கோடி ரூபாய் இலஞ்சம் வழங்கப்பட்டதாகவும் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் என்னிடம் தொலைபேசியில் குறிப்பிட்டார். இது விடயம் தொடர்பில் முறைப்பாடளிக்குமாறு அவருக்கு அறிவுறுத்தினார் என்று பொதுமக்கள் பாதுகாப்பு

11

### காங்கிரஸ் - ரெலோ - புளொட் உட்பட

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மீளவும் செயல்பட விரும்புகிறோம்!

### இலங்கை தமிழ் அரசு கட்சி

- தேசிய மக்கள் சக்தியுடன் எந்த பேரமும் இல்லை
- தனிமனித முடிவு எடுக்கும் கட்சி என்பது அபாண்டம்




யாழ்ப்பாணம், மே 10

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயல்பட ரெலோ தலைவர் விருப்பம் தெரிவித்துள்ளார். புளொட், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உள்பட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயல்பட்ட கட்சிகளை மீண்டும் செயல்பட வருமாறு கோரிக்கை விடுக்கிறோம் - இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.**

நேற்றைய தினம் நல்லூரிலுள்ள தனது பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், தனிமனித தீர்மானம் எடுக்கும் கட்சியாக நாங்கள் இல்லை. தலைவர் என்ற முறையில் நான் இதனை தெளிவாக சொல்கிறேன். முன்பு அவ்வாறான நிலைமை இருந்திருக்கலாம். ஆனால், தற்போது அவ்வாறில்லை. ஆகக்குறைந்தது தலைவர், செயலாளராவது கலந்துபேசி எல்லா விடயங்களிலும் இணைந்துதான் செயல்படுகிறோம். ஆகவே, தனி மனித தீர்மானம் என்ற பேச்சு அபாண்டமானது.

11

## தேசிய வெசாக் வாரம் இன்று முதல் ஆரம்பம்!

கொழும்பு, மே 10

இன்று சனிக்கிழமை முதல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தேசிய வெசாக் வாரம் பிரடகனப்படுத்தப்பட்டுள்ளது.

"நல்ல குணங்களைக் கொண்ட உன்னத மக்களுடன் பழகுவோம்" எனும் தொனிப்பொருளில் இந்த ஆண்டு தேசிய வெசாக் கொண்டாடப்படுகிறது.

இதன் ஆரம்ப நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் நுவரெலியா பௌத்த நிலைய விகாரையில் நடைபெறவுள்ளது.

வெசாக் வாரத்தில் முதல் மூன்று நாட்கள் நாடளாவிய ரீதியிலுள்ள இறைச்சி, மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி: கலந்துரையாடியே தீர்மானம்!

### ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

யாழ்ப்பாணம், மே 10

"உள்ளூராட்சி சபைகளில் இணைந்து ஆட்சி அமைப் பது தொடர்பில் பல தரப்பினரும் எம்முடன் பேசி வருகின்றனர். இது தொடர்பில் எமது கூட்டணிக்குள் கலந்துரையாடி முடிவு எடுப்போம்", என்று ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் பங்காளி கட்சி தலைவரான த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர் பில் நடைபெறும் பேச்சுகள்

11

## தமிழ் சிறுமி துஷ்பிரயோகம்: ஆசிரியருக்கு கட்டாய விடுப்பு!

கொழும்பு, மே 10

கொழும்பு - கொட்டாஞ்சேனை தமிழ் மாணவியை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார் என்று குற்றஞ்சாட்டப்படும் ஆசிரியர் கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டுள்ளார்.

கொழும்பில் பிரபல கல்லூரியின் மாணவி ஒருவர் ஆசிரியர் ஒருவரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார். இதைத் தொடர்ந்து, அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார். இதையடுத்து,

11

## 7 மாதங்களில் 52 பேர் சுட்டுக் கொலை!

கொழும்பு, மே 10

கடந்த 7 மாதங்களில் நாட்டில் இடம்பெற்ற 79 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 52 பேர் பலியாகினர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் 21ஆம் திகதி முதல் நேற்று (நேற்று முன்தினம்) வரை இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டு

11

## ஹெலிகொப்டர் விபத்தில் 6 சிப்பாய்கள் உயிரிழப்பு!

கொழும்பு, மே 10

விமானப் படைக்கு சொந்தமான பெல் 212 ரக ஹெலிகொப்டர் மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதில், இராணுவம், விமான படையைச் சேர்ந்த 6 பேர் உயிரிழந்தனர்.

ஹெலிகொப்டரை அவசரமாக தரையிறக்க முயன்ற போதே இந்த விபத்து இடம்பெற்றதாக விமானப் படை தெரிவித்துள்ளது.



பொலநறுவை - மாதுறு ஓயா பகுதியில் நேற்றுக் காலை இடம் பெற்ற இந்தச் சம்பவம் தொடர் பில் விமானப் படை மேலும் தெரிவித்தவை வருமாறு:

விபத்துக்குள்ளான ஹெலிகொப்டர் விமானப் படையின் 7ஆவது

11

## சிறார் துஷ்பிரயோக வழக்கை கையாள்வதற்கு பொறிமுறை!

### பிரதமர் ஹரிணி அறிவிப்பு

கொழும்பு, மே 10

சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளை கையாள்வதற்கு பொறிமுறை ஒன்றை அரசாங்கம் அறிமுகம் செய்யவுள்ளது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அவர், இதனை நேற்றைய தினம் நடந்த பாராளுமன்ற அமர்வில் தெரிவித்தார்.

"சிறார் பாலியல் வன்கொடுமைகளை

11

# கொழும்பு மாணவியின் மரணத்துக்கு காரணமானவருக்கு உச்சதண்டனை!

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, மே 10

கொழும்பு இராமநாதன் கல்லூரி மாணவியின் மரணத்துக்குக் காரணமானவருக்கு உச்ச தண்டனை வழங்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த சங்கம் விடுத்த அறிக்கையில்,

யாழ்ப்பாணம் - புங்குடுதீவில் மாணவி வித்தியா கோரமாகக் கொலை செய்யப்பட்ட போது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பல்லாயிரம் பேரை ஒன்றுதிரட்டி குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க பேரணி நடத்தியதை யாவரும் அறிவர். இதே போன்று நாட்டின் தலைநகர் கொழும்பில் தமிழ் மாணவியொருவர் பரிதாபமாகக் கொல்லப்பட்டிருக்கின்றார். இதனை பலரும் மூடிமறைத்து குறித்த குற்றவாளிக்கு வெறும் இடமாற்றம் மட்டும் வழங்கப்பட்டிருக்கிறது.

இராமநாதன் மகளிர் கல்லூரியில் சில ஆசிரியர்கள் இடமாற்றம் வழங்கப்பட்டாலும் ஆசிரியர் சங்கத்தின் அனுசரணையோடு பல ஆண்டுகள் அங்கேயே பணியாற்றுகின்றனர். இது உண்மை. இந்த கொலை சம்பவத்தையும் அதே நபர்கள் மூடிமறைக்க முனைந்துள்ளனர்.

குற்றவாளியாகக் காணப்படுபவரும் ஆசிரியர் சங்கம் ஒன்றில் மிகவும் செல்வாக்குமிக்கவர். அதனாலேயே ஏற்கனவே இவர் இழைத்த குற்றத்துக்கு தண்டனை வழங்கப்படவில்லை.

இது போன்று சில மாவட்டங்களிலும் சிலர் பாதுகாக்கப்படுகின்றனர். எதுவாயினும் ஒரு பிள்ளையின் மரணத்துக்கு ஓர் ஆசிரியர் காரணமாக இருந்தால் அவருக்கு மரண தண்டனை வழங்கப்படவேண்டும். ஆகையால் குற்றவாளிக்குத் தண்டனை வழங்கப்படும் அதேவேளை உடந்தையானவர்களை வெளிப்படுத்தி அவர்களுக்கும் தண்டனை வழங்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# எமது கட்சி உறுப்பினர்கள் சோரம் போகமாட்டார்கள்!

## விமல் வீரவன்ஸ சொல்கிறார்

கொழும்பு, மே 10

சில உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு ஆளும் கட்சி எமது உறுப்பினர்களின் ஒத்துழைப்பை கோரியுள்ளது. எமது உறுப்பினர்கள் பணத்துக்காக சோரம் போகமாட்டார்கள் - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

தனது கட்சி தலைமை பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

மேலும், ஒருசில உள்ளூராட்சி சபைகளில் எங்களின் உறுப்பினர்களை தவிர ஆளும் கட்சிக்கு 23 ஆசனங்களும் எதிர்க்கட்சிக்கு 23 ஆசனங்களும் கிடைத்துள்ளன. எனவே, ஒரு சில பகுதிகளில் எங்களின் உள்ளூராட்சி உறுப்பினர்களின் பங்களிப்பு மிகத் தீர்மானமிக்கதாக இருக்கிறது.

தற்போது பல்வேறு சூட்சுமங்களை பயன்படுத்தி எங்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளும் நிலைமைக்கு ஆளும் கட்சி தள்ளப்பட்டுள்ளது. எனவே, எமது கட்சியிலுள்ள உறுப்பினர்கள் பணத்துக்கு சோரம் போகமாட்டார்கள் என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

இதேபோன்று எந்தவொரு கட்சிக்கும் ஒத்துழைப்பு வழங்க நாங்கள் இதுவரையில் தீர்மானம் எடுக்கவும் இல்லை - என்றார். (ஐ)

# உணவகம், வெதுப்பகத்துக்கு 70 ஆயிரம் ரூபாய் அபராதம்!

வடமராட்சி, மே 10

பருத்தித்துறையில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த வெதுப்பகம், உணவகம் என்பவற்றுக்கு 70 ஆயிரம் ரூபாய் அப ராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட வெதுப்பகம் ஒன்றில் மருத்துவ சான்றிதழ் இல்லாமல் வெதுப்பக பொருட்களை கையாண்டமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, வெதுப்பக சுற்றாடலில் இலையான்கள் பெருக இடமளித்தமை, அழுகிய உருளைக் கிழங்குகளை உணவு தயாரிப்புக்கு களஞ்சியப்படுத்தியமை, வெதுப்பக பொருட்களுடன் தொற்று ஏற்படும் வண்ணம் இரசாயன பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் நகர சபையின் பொது சுகாதார பரிசோதகர் ப.தினேஸ் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு நேற்று வெள் ளிக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, வெதுப்பக உரிமையாளர் குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொண்டார். அவரை கடுமையாக எச்சரித்த நீதிவான் 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

இதுபோன்று, மருத்துவ சான்றிதழ் இல்லாமல் உணவை கையாண்டமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, குடிப்பதற்கும் சுத்திகரிப்பதற்கும் பயன்படும் நீரானது குடிக்கத்தக்கது என உறுதி செய்யத் தவறியமை, சமைத்த மற்றும் சமைக்காத உணவுப்பொருட்களை தொற்று ஏற்படும் வண்ணம் களஞ்சியப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுக்காக உணவகம் ஒன்றின் உரிமையாளருக்கு 20 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ)

# கொழும்பு மாநகர சபையை எவருக்கும் விட்டுக்கொடோம்!

கொழும்பு, மே 10

கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்தை எந்தவொரு கட்சிக்கும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்று பிரதி அமைச்சர் சுனில் வட்டகல வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு மாநகர சபை மேயர் தெரிவு குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் மேற்கண்டவாறு கூறினார். தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்-

கொழும்பு மாநகர சபைக்கான தேர்தலில் எங்களது கட்சியே கூடுதல் ஆசனங்களை வென்றுள்ளது. எந்தக் கட்சியும் அதற்கு பக்கத்தில்கூட வர முடியாது.

**தேசிய மக்கள் சக்தி**

கொழும்பு மாநகர சபையின் மேயர் பதவி மற்றும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஏனைய தரப்புகளில் தெரிவாகியுள்ள ஒருசில உறுப்பினர்களுடன் கலந்துரையாடிக் கொண்டிருக்கிறோம். ஆனால், எந்தவொரு கட்சியையும் சேர்த்துக் கொண்டு மாநகர சபை நிர்வாகத்தைக் கைப்பற்ற நாங்கள் தயாரில்லை.

இதேநேரம், எந்தவொரு கட்டத்திலும் கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்தை வேறு எந்தவொரு தரப்புக்கும் விட்டுக் கொடுக்க மாட்டோம் - என்றார். (அ)

# ரஷ்ய தூதரகத்துக்கு குண்டு அச்சுறுத்தல்!

## சீனாவுக்கு தப்பமுயன்ற பெண் கைது

கொழும்பு, மே 10

கொழும்பில் உள்ள ரஷ்ய தூதரகத்தில் இருந்த பாதுகாப்பு அதிகாரிகளிடம் மடிக்கணினி ஒன்றை கொடுத்துச் சென்றார் என்று கூறப்படும் வெளிநாட்டு பெண் ஒருவர் சீனாவுக்கு தப்பிச் செல்ல முயன்ற போது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டார்.

ஜேர்மனி நாட்டவரான 33 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இந்த வெளிநாட்டு பெண் கடந்த ஏப்ரல் 28 ஆம் திகதி கொழும்பில் உள்ள ரஷ்ய தூதரகத்துக்கு சென்றுள்ளார். அங்கு கடமையில் இருந்த பாதுகாப்பு அதிகாரிகளிடம் மடிக்கணினி ஒன்றை கொடுத்துவிட்டு அங்கிருந்து சென்றிருந்தார்.

இந்த வெளிநாட்டு பெண் சென்ற சிறிது நேரத்தில் ரஷ்ய தூதரகத்துக்குள் வெடிகுண்டு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபரான வெளிநாட்டு பெண் சீனாவுக்கு தப்பிச் செல்ல முயன்ற போது கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். (ஐ)

# கொழும்பு - காங்கேசன் விசேட ரயில் சேவை!

கொழும்பு, மே 10

கொழும்பு - கோட்டையில் இருந்து காங்கேசன்துறை வரை விசேட சேவை முன்னெடுக்கப்படவுள்ளது. நாளை மறுதினம் திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமையும் இந்த விசேட ரயில் சேவைகள் நடைபெறவுள்ளன.

நீண்ட விடுமுறை, வெசாக் பண்டிகையை முன்னிட்டு இந்த விசேட ரயில் சேவைகள் நடைபெறவுள்ளன என்று ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கொழும்பு - கோட்டையில் இருந்து பதுளை வரையிலும், பதுளையில் இருந்து கொழும்பு - கோட்டை வரையிலும் விசேட சேவை முன்னெடுக்கப்படவுள்ளது. (ஐ)

# விழிப்புணர்வு கருத்தரங்கும் நடைபவனியும்

யாழ்ப்பாணம், மே 10

உலக பேறுகால உளநல வாரத்தை முன்னிட்டு 'பேசாததை பேசுவோம்' என்ற தொனிப் பொருளில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பொதுநூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் பேறுகால உளநலம் சார்ந்து, பல்வேறு கோணங்களில் பலர் உரையாற்றவுள்ளனர்.

இதில், உளநல மருத்துவ நிபுணர் எஸ். சிவதாஸ் எழுதிய 'பேறுகால உளநலம்' என்னும் நூல் வெளியீடும் நடைபெறவுள்ளது. இதனை யாழ் போதனா மருத்துவமனையின் சிறுவர் உளநல பிரிவான அரும்புகள் என்ற அமைப்பு ஒழுங்கு செய்துள்ளது.

இதேவேளை, நாளை காலை 8 மணிக்கு நடை பவனி ஒன்றும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. யாழ். போதனா மருத்துவமனை முன்றலில் ஆரம்பமாகும் இந்த நடைபவனி யாழ். பொதுநூலகம் முன்பாக நிறைவடையும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அளுத்கமவில் 13 சிறுவர்களை ஏற்றிச்சென்ற ஓட்டோ விபத்து

கொழும்பு, மே 10

அளுத்கம - பின்ஹேன குருகந்தை பகுதியில் 13 சிறுவர்களுடன் பயணித்த முச்சக்கர வண்டி ஒன்று விபத்துக்கு உள்ளானது.

குறித்த பகுதியில் உள்ள சிறுவர் இல்லத்துக்கு சொந்தமான முச்சக்கர வண்டி ஒன்றே இவ்வாறு விபத்துக்கு உள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர்களை அதிக வேகமாக பாடசாலைக்கு அழைத்து சென்ற சந்தர்ப்பத்தில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த 13 சிறுவர்களும், முச்சக்கரவண்டியின் சாரதியும் பேருவளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர்களில் படுகாயமடைந்த 6 பேர் மேலதிக சிகிச்சைகளுக்காக நாகொடை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (அ)

# நால்வர் கொலை சந்தேகநபரே கொழும்பில் சுட்டுக்கொலை!

கொழும்பு, மே 10

மொனராகலை - உடவளவையில் நால்வர் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரே நேற்று முன்தினம் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு, - கொட்டாவை - மலபல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளில் வந்தவர்மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு சிலர் தப்பிச் சென்றனர்.

இதில் படுகாயமடைந்தவர் ஹோமகம ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். இவ்வாறு உயிரிழந்தவர் இரத்தினபுரி - எம்பிலிப்பிட்டியை சேர்ந்த 43 வயது நபராவார்.

இந்த நிலையில், இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர் மொனராகலை - உடவளவை பிரதேசத்தில் நால்வர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின் பிரதான சந்தேக நபர் என்று விசாரணைகளில் தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிதாரிகள் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu ஈළනාඩු
10.05.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 27

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தேர்தல் முடிந்துவிட்டது - அடுத்தது?

உள்ளூராட்சி தேர்தலின் முடிவுகளின்படி வடக்கு - கிழக்கில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி முன்னிலை பெற்றிருக்கிறது. இலங்கை தமிழ் அரசு கட்சிதான் தமிழ் மக்களின் பிரதான கட்சியென்று அந்தக் கட்சியின் தலைவர்கள் கூறிக்கொள்ளலாம். இதேபோன்று, தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் அனைத்தும் பெற்றுக்கொண்ட வாக்குகளை ஒன்று சேர்த்தால் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்தோடுதான் நிற்கின்றனர் - தேசிய மக்கள் சக்திக்கு ஒரு பாடத்தைப் புகட்டிவிட்டனர் என்றவாறான தர்க்கத்தையும் சிலர் முன்வைக்கலாம். தர்க்க ரீதியில் நோக்கினால், இவ்வாறான வாதங்கள் சரி போன்றும் தெரியக்கூடும். ஆனால், ஒரு தேர்தலின் முடிவுகளை மட்டும் வைத்துக் கொண்டு தமிழ் மக்கள் தேசமாகத் திரண்டு விட்டதான முடிவுக்கு வருவது அரசியல் ரீதியில் புத்திசாதுரியமானதா?

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின்படி தாங்கள் வடக்கு - கிழக்கில் தோற்கவில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் அமைச்சரும் ஜே. வி. பியின் தீர்மானம் எடுக்கும் குழுவில் ஒருவருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்திருக்கிறார். தேசிய மக்கள் சக்தி பெற்றுக் கொண்ட வாக்குகள் மற்றும் ஆசனங்களின் அடிப்படையில் நோக்கினால் ஒரு தனிக்கட்சியாக தேசிய மக்கள் சக்தியே வடக்கு - கிழக்கில் இரண்டாவது நிலையில் வெற்றி பெற்றிருக்கும் பிரதான கட்சியாகும்.

தேசிய மக்கள் சக்தியை மட்டுமே குறிவைத்து பல்வேறு தமிழ்த் தேசியவாத பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்ட பின்னரும்கூட தேசிய மக்கள் சக்திக்கு வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் வாக்களித்திருக்கின்றனர் என்பதைத்தான் இந்த இடத்தில் உற்றுநோக்க வேண்டும். பொதுவாக ஆளும் தரப்பின்மீதான அரசியல் கவர்ச்சி குறைந்து கொண்டு செல்வதில் ஆச்சரியமில்லை. அவ்வாறு குறையாது விட்டால்தான் ஆச்சரியப்பட வேண்டும்.

தேர்தல் அரசியலை உற்று நோக்கினால் இது ஓர் உலகளாவிய நிலைமை. ஆனால், தமிழ்ச் சூழலை பொறுத்தவரையில் கவனிக்க வேண்டிய விடயம் வேறு. அதாவது, ஜே. வி. பி. இனப்படுகொலைக்கு துணைபுரிந்தது, விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின்போது இராணுவத்துக்கான ஆட்சேர்ப்பில் ஈடுபட்டது, ஜே. வி. பி. தமிழ் மக்களின் ஒரு பிரதான எதிரி என்றவாறான கடுமையான பிரசாரங்களை முன்னெடுத்த போதிலும்கூட தமிழ் மக்களில் ஒரு கணிசமான பிரிவினர் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருக்கின்றனர்.

இது எதிர்காலத்தில் அதிகரிக்கலாம் அல்லது மேலும் குறையலாம். இது, தேர்தல் அரசியலில் எப்போதும் நிகழக்கூடிய ஒன்றாகும். இதேபோன்று, இன்று, இலங்கை தமிழ் அரசு கட்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் வாக்களித்திருக்கும் மக்கள் எதிர்காலத்தில் தங்களின் ஆதரவிலிருந்து விலகிக் கொள்ளவும்கூடும்.

தமிழ்த் தேசியம் வென்றுவிட்டதாகக் கற்பனை செய்வோர் மேற்படி கணிப்பின் அடிப்படையில்தான் விடயங்களை உற்றுநோக்க வேண்டும். தற்போது கைப்பற்றப்பட்டிருக்கும் உள்ளூராட்சி சபைகள் அனைத்தும் தமிழ் மக்களின் சமூக, பொருளாதார நலனுக்காக எவ்வாறு திறம்பட பயன்படுத்தப்படுகின்றன என்பதில்தான் இன்றைய ஆதரவின் எதிர்காலம் தங்கியிருக்கிறது. முக்கியமாக பதவிச் சண்டைகளின்றி - ஒற்றுமையுடன் - எவ்வாறு உள்ளூராட்சி சபைகளை வினைத்திறன்மிக்கதாக நிர்வகிக்கப்படுகின்றனவோ, அந்தளவுக்கு மக்கள் தமிழ் கட்சிகளோடு நிற்பர். தேர்தலில் வெற்றி பெறுவது முக்கியமல்ல, கிடைக்கும் அதிகாரம் மக்களுக்கானதாக மாறுகிறதா அல்லது இல்லையா என்பதில்தான் தமிழ் மக்களுக்கான அரசியல் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

# வற் வரி முறைமை நீக்கப்படுவதை ஏற்றுமதியாளரால் தாங்கமுடியாது!

**தேசிய ஏற்றுமதி சம்மேளனம்**

கொழும்பு, மே 10

எளிமைப்படுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி (வற்) முறைமை நீக்கப்படுவதை, ஏற்றுமதியாளர்களால் தாங்கிக்கொள்ள முடியாது என்று தேசிய ஏற்றுமதி சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு முதல் எளிமைப்படுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமை நீக்கப்படும் என்ற நிலைப்பாட்டை அரசாங்கம் எடுத்துள்ளது. இதனால், ஏற்றுமதி துறை பெரிதும் பாதிக்கப்படும் என்று, ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழமையான பெறுமதி சேர் வரி முறைமையில் இருந்து எளிமைப்படுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறை மாறுபட்டதாக உள்ளது.

இந்த முறைமையின் மூலம், வணிகத்தில் ஈடுபடுகின்றவர்கள், செலுத்தப்பட்ட வரியின் மீள் பெறுகைக்கு நீண்டகாலம் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லாது செய்யப்படுவதுடன், வர்த்தகத்துக்கான பணப் பாய்ச்சல் ஓட்டம் தங்கு தடையின்றி நிலவுகிறது.

2011ஆம் ஆண்டு அமுலாக்கப்பட்ட இந்த முறைமையால் குறிப்பாக ஏற்றுமதி துறையினர் தாமதங்களின்றித் தங்களது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடியதாக இருந்தது.

தற்போது அது உடனடியாக நீக்கப்படுவதானது, இலங்கைக்கு அதிகபட்ச அந்நியச்செலாவணியை கொண்டுவருகின்ற ஏற்றுமதித் துறையை பாதிப்படையச் செய்யும்.

வரி கட்டமைப்பு மறுசீரமைப்பு வரவேற்கப்படுகின்ற போதும், அதனைக் கட்டம் கட்டமாக செய்ய வேண்டுமேயன்றி, ஏக சமயத்தில் அமுலாக்குவது பெரும் பாதிப்பை உருவாக்கும் என்று, ஏற்றுமதியாளர்கள் சம்மேளனம் தமது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளது. (அ)

# சமூக ஊடகங்களில் அறிமுகமானோரை ஏமாற்றி கொள்ளையிட்ட நால்வர் கைது!

கொழும்பு, மே 10

சமூக ஊடகங்களில் அறிமுகமான இளைஞர்களை ஏமாற்றி அநுராதபுரம் - மிகிந்தலை பிரதேசத்தில் உள்ள காட்டு பகுதிகளுக்கு அழைத்துச் சென்று பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்டதாகக் கூறப்படும் பெண் உட்பட நால்வர் மிகிந்தலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டர்களில் 31 வயதுடைய பெண்ணொருவரும் காணப்படுகின்றார்.

சந்தேக நபரான பெண் அநுராதபுரம், விஜயபுரம், அசோகபுரம் மற்றும் கெக்கிராவை ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 21 முதல் 32 வயதுக்குட்பட்ட இளைஞர்களுடன் சமூக ஊடகங்களில் அறிமுகமாகி, அவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை பேணியுள்ளார்.

பின்னர் சந்தேக நபரான பெண், குறித்த இளைஞர்களிடம் நேரில் சந்திக்க வருமாறு கூறி அவர்களை ஏமாற்றி காட்டுப் பகுதிகளுக்கு அழைத்துச் சென்று தனது நண்பர்களின் உதவியுடன் இளைஞர்களை தாக்கி, அவர்களின் மோட்டார் சைக்கிள்கள், கைபேசிகள் மற்றும் பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட இரண்டு இளைஞர்கள் மகியங்கனை மற்றும் அவுக்கண ஆகிய பொலிஸ் நிலையங்களில் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் நான்கு கைபேசிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மிகிந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 34 பங்களாதேஷ் பிரஜைகள் கைது!

கொழும்பு, மே 10

வீஸா காலாவதியான நிலையில் நாட்டில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 34 பங்களாதேஷ் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சீதுவை பகுதியில் உள்ள ஒரு விடுதியில் தங்கியிருந்தபோது குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையின் சிறப்பு புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் குழுவால் இவர்கள் நேற்று முன்தினம் மதியம் கைது செய்யப்பட்டனர்.

கைதான பங்களாதேஷ் பிரஜைகள் 19 முதல் 54 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

குடிவரவு - குடிவரவு துறை அதிகாரிகளுக்குக் கிடைத்த பல புலனாய்வு அறிக்கைகளின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பங்களாதேஷ் பிரஜைகள் வெலிசறை குடிவரவு - குடியகல்வுத் துறையின் தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மேலும், குடிவரவு - குடியகல்வுத் துறை அதிகாரிகள் அவர்களை விரைவில் பங்களாதேஷுக்கு நாடு கடத்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






மே - 10 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 27
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : திரயோதசி

**மேடம்**

உங்களால் மற்றவர்கள் பயனடைவாகள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் பற்றுவரவு உயரும். உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**இடபம்**

உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரியவரும். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். கனவு நனவாகும் நாள்.

**மிதுனம்**

திட்டமிட்ட காரியங்ங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**

உடன்பிறந்தவர்கள் உங்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**சிம்மம்**

கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் முடியும். உடல்நலம் சீராகும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள்.

**கன்னி**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப்போக வேண்டிய நாள்.

**துலாம்**

எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல்லும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**

எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களைநிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும்.

**தனுசு**

உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விஐபிகள் அறிமுகமாவார்கள். வாகன வசதி பெருகும். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. சாதித்துக் காட்டும் நாள்.

**மகரம்**

கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்தபிணக்குகள் நீங்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புவியாபாரத்தில் பற்றுவரவு கணிசமாக உயரும். புத்துணர்ச்சி பெருகும்.

**கும்பம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பிரச்னை வந்துநீங்கும்.

**மீனம்**

பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும்.

# டெங்கால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, மே. 10

நாடு முழுவதும் டெங்கு காய்ச்சல் அதிகரித்து வருகின்றமை தொடர்பில் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு கவலை வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 19,000 இற்கும் மேற்பட்டோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஏழு பேர் உயிரிழந்துள்ளதாக வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் டெங்கு பரவல் ஓரளவு கட்டுக்குள் கொண்டு வரப்பட்டாலும், அப்பகுதியில் உள்ள பல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் தொடர்ந்து அதிக எண்ணிக்கையிலான டெங்கு பாதிப்புகளைப் பதிவு செய்து வருகின்றன.

இந்நிலையில் அதிக ஆபத்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளை இலக்காகக் கொண்டு சிறப்பு டெங்கு ஒழிப்பு திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நுளம்பு இனப்பெருக்கம் செய்யும் இடங்களை அகற்றுதல், பொது விழிப்புணர்வு மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் இந்த பிரசாரம் மே 19 முதல் மே 24 வரை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தேசியத்தை நேசிப்போருடன் சேர்ந்து ஆட்சி அமைப்போம்!

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.



மன்னார், மே 10

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வைத்துப் பார்க்கின்றபோது வடக்கு, கிழக்கில் எந்த கட்சியும் தனித்து ஆட்சி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே நாங்கள் கூறியது போல் தேசியத்தை நேசிக்கும் கட்சிகளை இணைத்துக் கொண்டு நாங்கள் ஆட்சி அமைப்போம் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்துள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மக்கள் வடக்கு, கிழக்கில் எமக்கு ஆணை தந்துள்ளனர். எதிர்வரும் காலங்களில் அனைவரும் ஒற்றுமையாக செயல்படவில்லை என்றால் மக்கள் வழங்கிய ஆணையை மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்ற செய்தியை சொல்லியுள்ளனர்.

நாங்கள் ஒற்றுமையாக இல்லாத நிலையில் கடந்த பாராளுமன்ற தேர்தலில் ஜே.வி.பி. அரசாங்கத்திற்கு கூடுதலாக மக்களின் ஆதரவு கிடைக்க பெற்றுள்ளமை அனைவரும் அறிந்த விடயம். எனினும், இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வடக்கு கிழக்கில் ஜே.வி.பி. பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது.

தமிழர்களை தமிழர்கள் ஆளக்கூடிய வகையில் தமது ஆணையை வழங்கி உள்ளனர். மேலும் தமிழ் கட்சிகள் ஒற்றுமையாக பயணிக்க வேண்டும் என்ற செய்தியையும் சொல்லி இருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலை இயக்கத்தினை பொறுத்த வகையில் அடுத்தடுத்து வருகின்ற தேர்தலாக இருக்கலாம், போராட்டங்களாக இருக்கலாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கின்ற அடிப்படையில் செயல்படக்கூடிய ஒரு முயற்சியை நாம் முன்னெடுக்கின்றோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வைத்துப் பார்க்கின்ற போது வடக்கு கிழக்கில் எந்த கட்சியும் தனித்து ஆட்சி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே நாங்கள் கூறியது போல் தேசியத்தை நேசிக்கும் கட்சிகளை இணைத்துக் கொண்டு நாங்கள் ஆட்சி அமைப்போம். நாங்கள் தமிழ் அரசு கட்சியுடனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அணியுடனும் நாங்கள் பேசிக்கொண்டு இருக்கின்றோம்.

எங்களுடைய முதல் ஆட்சி அமைக்கின்ற செயல்பாடுகள் தமிழ் தேசிய கட்சிகளுடன் இருக்கும். அதனடிப்படையில் பேச்சுகள் நடக்கின்றன - என்றார். (ஐ)

# பிரான்ஸ் கடற்படை கப்பல் கொழும்பில்

கொழும்பு, மே. 10

பிரான்ஸ் கடற்படை கப்பல் “பியூடெம்ப்ஸ் பியூப்ரே”, உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு, கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

நேற்று காலை, கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த கப்பலை, இலங்கை கடற்படையினர், கடற்படை மரபுகளுக்கு அமைவாக வரவேற்றனர்.

80.65 மீற்றர் நீளமான கப்பல், 58 அங்கத்தவர்களை கொண்டுள்ளதுடன், கப்பலின் கட்டளை அதிகாரியாக, கொமாண்டர் பெர்தியோ டிமிட்ரி பணியாற்றுகின்றார்.

கப்பலின் கட்டளை அதிகாரி மற்றும் குழுவினர், தேசிய நீரியல் வரைபட அலுவலகத்தின், சிரேஷ்ட அதிகாரிகளுடன் உத்தியோகபூர்வ சந்திப்புகளை நடத்திய பின்னர், நீரியல் வரைபட சேவை தொடர்பான, முக்கியத்துவம் வாய்ந்த இரு தரப்பு பிரச்சினைகள் குறித்து ஆராயவுள்ளனர்.

கப்பல் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில், அங்கத்துவ குழுவினர், இலங்கையில் உள்ள சுற்றுலாத் தலங்களை பார்வையிடவுள்ளனர்.

இந்த நிலையில், நேற்று வருகை தந்த பிரான்ஸ் கப்பலானது, எதிர்வரும் 13 ஆம் திகதி, கொழும்பில் இருந்து புறப்படவுள்ளது. (அ)

# மின்னல் தாக்கி விவசாயி மரணம்

யாழ்ப்பாணம், மே 10

தோட்டத்தில் மிளகாய் பறித்துக் கொண்டிருந்தவர் மின்னல் தாக்கி உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஏழாலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த குணரட்ணம் குமரன் (வயது - 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

உயிரிழந்தவர், தனது தோட்டத்தில் மிளகாய் ஆய்ந்து கொண்டிருந்தார். அப்போது மின்னல் அவரை தாக்கியது. மின்னலால் தாக்குண்டவரை உறவினர்கள் உடனடியாக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். எனினும், அவர் அங்கு உயிரிழந்தார். (ஐ-05)

# ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

கொழும்பு, மே. 10

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணயமாற்று வீத அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 294 ரூபா 88 சதமாக பதிவாகியுள்ளது.

அத்துடன் விற்பனை விலை 303 ரூபா 24 சதமாக பதிவாகியுள்ளது. (அ)

# கொழும்பில் உயிர்மாய்த்த மாணவி பாராளுமன்றத்தில் வாய்த்தர்க்கம்!

## ஆளும், எதிர்த்தரப்பினர் வாக்குவாதம்

கொழும்பு, மே. 10

கொழும்பில் உயிர்மாய்த்துக்கொண்ட மாணவியின் மரணம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஆளும், எதிர்த்தரப்பினரிடையே கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. பாராளுமன்றம் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்று கூடியபோது நிலையியற் கட்டளைச் சட்டத்தின் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இது தொடர்பிலான கேள்வியை முன்வைத்தார்.

**சஜித் பிரேமதாஸ-**

கொழும்பில் பாடசாலை மாணவியொருவர் தற்கொலை செய்துகொண்ட விடயம் மிகவும் உணர்வுபூர்வமானது. பாடசாலையில் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகியுள்ளதுடன் தனியார் கல்வி நிலையத்தின் ஆசிரியரால் மன உளைச்சலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு பல சம்பவங்கள் இடம்பெறலாம். ஆதலால் இந்த விடயத்தில் விசேட பொறி முறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என யோசனை முன்வைக்கிறேன்-என்றார்.

**பிரதமர் ஹரிணி அமரசூரிய-**

இவ்வாறான சம்பவங்கள் மிகவும் உணர்வுபூர்வமானவை. இவ்வாறான சம்பவங்களை எவராலும், விசேடமாக பெற்றோரால் தாங்கிக்கொள்ள முடியாதவை. நாம் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் என்பதால் மிகவும் அவதானமாக கையாளவேண்டியுள்ளதுடன் அரசியல் தலையீடுகளை தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

இவ்வாறு சிறுமி தற்கொலை செய்துகொண்டமையானது சமூகம் என்ற வகையில் நாம் தோல்வியடைந் துள்ளோம் என்பதைக் காட்டுகிறது. ஆதலால் நாம் அனைவரும் இதற்கு பொறுப்புக் கூற வேண்டும்.

மாணவியின் விடயத்தில் முதலாவது சம்பவம் இடம் பெற்றபோது அது குறித்த முறையாக அறிக்கையிடப்படவில்லை. ஆதலால், பாடசாலை அதிபரிடம் நாம் விளக்கம் கோரியுள்ளோம்.

இந்த விடயத்தில் புதிய பொறிமுறையொன்றை அமைப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். அதற்கமைய மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, கல்வி அமைச்சு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, பொலிஸ் திணைக்களம் ஆகியன இணைந்ததான பொறிமுறையொன்றை அமைக்க கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன-என்றார்.

**அஜித் பி. பெரேரா எம்.பி.-**

எமது பொலிஸார், முறைப்பாடு ஒன்று கிடைக்கும் பட்சத்திலேயே விசாரணை மேற்கொள்ள முடியும் என்ற எண்ணப்பாட்டில் இருக்கிறார்கள். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினரம் அவ்வாறே நினைக்கிறார்கள்.

பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு அளிக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடைக்காது. சம்பவம் ஒன்று இடம்பெறும் பட்சத்தில் சுயமாகவே பொலிஸாரால் விசாரணை நடத்த முடியும்-என்றார்.

**சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க-**

பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்ட விடயத்தில் முறைப்பாடு கிடைத்ததா இல்லையா என்பது பற்றி நான் கூறவில்லை. இவ்வாறான சம்பவம் இடம்பெற்றதன் பின்னர் அமைச்சர் சரோஜா போல்ராஜ் பிரதிப் பொலிஸ் மாஅதிபருக்கு அழைத்து விடயத்தை தெரியப்படுத்தியுள்ளார். அவர் ஒரு பெண். அவருடைய பெயர் எனக்கு நினைவில் இல்லை.

சிறுமியின் பெற்றோர் ஊடக சந்திப்பை நடத்தியுள்ளனர். நேற்று பேரணியொன்றும் முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையில் பெற்றோர் அதனுடன் தொடர்புபடுவார்கள் என்ற எண்ணத்தில் முறைப்பாடு அளிக்க வேண்டும் என அமைச்சர் சரோஜா கூறியுள்ளார். அதைவிடுத்து அவர் தவறாக ஏதும் கூறவில்லை.

முறைப்பாடு அளிக்கப்பட வேண்டியதும் அவசியம் அல்லவா?

நான் அறிந்த வரையில் எமக்கு கண்ணுக்குத் தெரியும் விடயங்களைத் தவிர தேடி ஆராய்ந்து பார்க்க வேண்டிய நிறைய விடயங்கள் உள்ளன-என்றார்.

**முஜிபுர் ரஹ்மான் எம்.பி.-**

சபாநாயகரே, எனது உரைக்கு தடை ஏற்படுத்தாதீர்கள். எனக்குத் தெரிந்த விடயங்களை பிரதமரிடம் நான் கூற விளைகிறேன். யோசனையை முன்வைக்கிறேன்.

இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றதன் பிறகு சட்ட வைத்திய அதிகாரியிடம் மாணவியை பெற்றோர் அழைத்துச் சென்றுள்ளனர். வைத்தியசாலையின் ஊடாகவே கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கொட்டாஞ்சேனை பொலிஸார் பம்பலப்பிட்டி பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

அதன் பின்னர் ஆசிரியர் கைதுசெய்யப்பட்டு மூன்று நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மாணவியை விலக்கிக்கொள்ளுமாறு பாடசாலையின் அதிபரால் பெற்றோருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

நேற்று எதற்காக பேரணியாக சென்றார்கள்? பேரணியாக சென்றதன் காரணத்தினால் தான் ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்-என்றார்.

**பிரதமர் ஹரிணி அமரசூரிய-**

அது தவறானதாகும். நேற்று ஆர்ப்பாட்டம் செய்த காரணத்தினால் ஆசிரியர் இடமாற்றம் செய்யப்படவில்லை. அதற்கு முன்னரே அவர் இடமாற்றம் செய்யப்பட்டார்.

இந்த விடயம் தொடர்பில் கல்வி அமைச்சு தலையிட்டது. அதிபரிடம் விளக்கம் கோரப்பட்டதும் இதற்கு முன்னர் தான்-என்றார்.

**முஜிபுர் ரஹ்மான் எம்.பி.-**

என்னைப் பேசவிடுங்கள் சபாநாயகரே. எனக்கு தவறான தகவல்களைக் கூறி அரசியல் செய்ய வேண்டிய அவசியம் கிடையாது. பிரதமரை தெளிவுபடுத்துவதற்காகவே நான் கருத்துகளை முன்வைக்கிறேன்.

மாணவியை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய ஆசிரியரும் தனியார் கல்வி நிலையத்தின் ஆசிரியரும் நண்பர்கள். அவர் தவறான தகவல்களை தனியார் வகுப்பு ஆசிரியருக்கு வழங்கியுள்ளார். அதன் பின்னர் அனைத்து மாணவர்கள் முன்னிலையிலும் தனியார் வகுப்பு ஆசிரியர் அந்த மாணவியை தவறாக பேசியுள்ளார்.

அதனால் தான் மாணவி மேலும் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளார்.

உங்களுக்குத் தெரியுமா? தனியார் வகுப்பு நடத்தும் ஆசிரியரின் வீட்டுக்கு நேற்று பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டவருக்கு ஏழு அல்லது எட்டு பேர் பாதுகாப்பு வழங்குகிறார்கள்.

கல்வி அமைச்சும் பொலிஸாரும் உடனடி விசாரணைகளை நடத்த வேண்டும்.

தற்போது நடைபெறும் விசாரணைகளின் நம்பகத்தன்மை தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளது-என்றார்.

**சஜித் பிரேமதாஸ-**

இது அரசியல் விவாதம் ஒன்றை நடத்துவதற்காக முன்வைக்கப்பட்ட பிரச்னை அல்ல. அதனை முதலாவதாக கூற வேண்டும்.

2024 ஒக்ரோபர் 23 ஆம் திகதி துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளது. அதன் பின்னர் அழுத்தங்கள் காரணமாக அந்தப் பாடசாலையிலிருந்து மாணவியை விலக்கிச் சென்றுள்ளனர்.

தனியார் வகுப்பு ஆசிரியர், அந்த மாணவியை தவறாக பேசியுள்ளார். இவை நடந்த விடயங்கள்.

இதனுடன் தொடர்புடைய ஆசிரியருக்கு 2025 மே 08 ஆம் திகதியே இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்களை தடுப்பதற்கு உரிய பொறிமுறையொன்று அவசியம் என்றே நான் குறிப்பிடுகிறேன்-என்றார்.

**சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன-**

இதனை விவாதமாக மாற்றிக்கொள்ளாமல் நாம் சபை நடவடிக்கைகளை தொடர்ந்து நடத்திச்செல்வோம்.

இதேவேளை, இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி குமாரி இது தொடர்பில் கருத்து வெளியிட முற்பட்டபோதும் சபாநாயகர் அதற்கு இடமளிக்கவில்லை. இதனால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது-என்றார். (அ)

# சரோஜா போல்ராஜின் பொருத்தமற்ற பேச்சு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, மே. 10

அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜின் பொருத்தமற்ற வார்த்தைகள் தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொழும்பில் உயிர்மாய்த்துக்கொண்ட மாணவியின் விடயத்தில் பெற்றோர் முறைப்பாடு அளிக்கவில்லை என்றும் முறைப்பாடு அளிக்கப்படும் பட்சத்திலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் சரோஜா போல்ராஜ் கூறியுள்ளார்.

இதனை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.இந்தச் சம்பவம் தொடர்பில் அறிந்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கடந்த ஆறாம் திகதி அறிக்கை வெளியிட்டுள்ளது. சட்ட வைத்திய அதிகாரியினால் பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவர் பொருத்தமற்ற வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண் டுள்ளார்-என்றார். (அ)

டான் பிரியசாத் கொலை:

# சந்தேகநபர்கள் இருவரையும் அடையாளம் காட்டினர் சாட்சிகள்

கொழும்பு, மே 10

டான் பிரியசாத் கொலை தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் இருவர் நேற்று கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்பில் சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து, சந்தேக நபர்கள் இருவரையும் எதிர்வரும் 23ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனவல வின் உத்தரவுக்கமைய இந்த அடையாள அணிவகுப்பு நேற்று நடத்தப்பட்டது. நீதி மன்றத்தில் முன்னிலையான மூன்று சாட்சிகள் சந்தேக நபர்கள் இருவரையும் அடையாளம் காட்டினர்.

கொட்டாஞ்சேனை மாணவி விவகாரம்:

# குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியர் என்.பி.பி. ஒருங்கிணைப்பாளர்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, மே 10

கொட்டாஞ்சேனையில் மாணவி ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கணித ஆசிரியர் தேசிய மக்கள் சக்தியின் (என். பி. பி.) கொழும்பு மத்தியின் ஒருங்கிணைப்பாளர் என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர் தேசிய மக்கள் சக்தியின் ஒருங்கிணைப்பாளராக இருப்பதால் இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை அரசாங்கம் அடக்க முயற்சிக்கிறதா என்று சந்தேகிக்கப்படுவதாகவும் பாராளுமன்றில் நாமல் கூறினார்.



ஒருவர் இறந்த பிறகு சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கை வெளியிடப்படும் போது, அந்த அறிக்கையில் சிறுமி மனநலம் பாதிக்கப்பட்டிருந்தார் என்று எப்படி குறிப்பிடப்பட்டது? இறந்த நபரின் மனநிலை குறித்த அறிக்கை எவ்வாறு வெளியிடப்பட்டது என்பது எனக்குத் தெரியவில்லை" என்றும் சொன்னார். (ஐ)

# மாயையைத் தோற்றுவிக்கும் செயல்பாட்டில் கஜேந்திரகுமார்

## ஆளுங்கட்சி விசனம்

கொழும்பு, மே. 10

**"வடக்கு மக்களின் காணி உரிமையை தேசிய மக்கள் சக்தி உறுதிப்படுத்தும். எனவே, சில விடயங்கள் தொடர்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மாயையை தோற்றுவிக்கின்றார்." -என்று அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அரசாங்கம் மீது சரமாரியாக குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

'அரசாங்கமும், இராணுவமும் இணைந்து வடக்கில் இனவாதத்தை பரப்புவதாக கஜேந்திரகுமார் எம்.பி. குற்றஞ்சாட்டினார். இனவாதத்தை தோற்கடித்த அரசாங்கம்தான் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாகும் என்பதை கூறிக்கொள்கின்றேன்.

அதேபோல வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கை ஒரு குடையின் கீழ் கொண்டுவந்த அரசாங்கமே தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாகும். எனவே, இந்நாட்டில் இனவாதத்துக்கு மீண்டும் இடமளிக்கப்படமாட்டாது."

- எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் சில காரணங்கள் தொடர்பில் மாயையை தோற்றுவிக்க முற்படுகின்றனர். கடந்த காலங்களிலும் இப்படி நடந்துள்ளது.

எமது நாட்டில் காணிகளை கையகப்படுத்திய அரசியல்வாதிகள் பற்றியும் எதிர்காலத்தில் நாம் கதைப்போம். காணிகளை கையகப்படுத்தி நண்பர்களுக்கு விற்றவர்கள் உள்ளனர். வடக்கிலும் அப்படி நடந்துள்ளது.

வடக்கு மக்களுக்கான காணி உரிமை உறுதிப்படுத்தப்படும். அவர்களுக்குரிய காணியை அவர்கள் சுதந்திரமாக பயன்படுத்த முடியும்."-என அமைச்சர் வசந்த சமரசிங்க மேலும் குறிப்பிட்டார். (அ)

# இந்த வருடம் இதுவரை 43 துப்பாக்கிச் சூடுகள்!

கொழும்பு, மே. 10

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 43 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாகவும் அவற்றில் 27க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் தரவுகள் தெரிவிக்கின்றன.

கொட்டாவ - மாலபல்ல விகாரை வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எம்பிலிபிட்டிய பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த இருவரால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில், அவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் அவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஹோமாகம பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இந்த மாதத்தில் இடம்பெற்ற நான்காவது துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இதுவாகும்.

கடந்த 3 ஆம் திகதி மீட்டியாகொட பகுதியில் உள்ள விருந்தகம் ஒன்றிற்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டதுடன், மேலும் ஒருவர் காயமடைந்தார்.

பின்னர் மே 4 ஆம் திகதி களுத்துறை - நாகொட பகுதியில் தேர்தல் வேட்பாளர் ஒருவரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

கடந்த ஐந்தாம் திகதி கல்கிசை பகுதியில் 19 வயதான இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். (அ)

# தேர்தல் பிரசார வருமான, செலவின அறிக்கைகளை சமர்ப்பிக்க பணிப்பு

கொழும்பு, மே. 10

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு அமைவான தேர்தல் பிரசார வருமானம் மற்றும் செலவின அறிக்கைகளை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டின் 03 ஆம் எண் தேர்தல் செலவின ஒழுங்குமுறைச் சட்டத்தின்படி, வேட்பாளர்கள், தேர்தல் பிரசார வருமானம் மற்றும் செலவினங்கள் குறித்த தனித்தனி அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, போட்டியிட்ட மாவட்டங்களில் உள்ள தெரிவத்தாட்சி அதிகாரியிடம் இந்த வருமானம் மற்றும் செலவின அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்தார்.

இதற்கிடையில், வருமானம் மற்றும் செலவின அறிக்கைகளை சமர்ப்பிக்கத் தவறும் வேட்பாளர்களுக்கு எதிரான சட்டத்தை அமுல்படுத்துவதில் சிக்கல் இருப்பதாக ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகள் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# நாணய சுழற்சியில் தெரிவான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்

கொழும்பு, மே. 10

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தின் வன்னாத்தவில்லு பிரதேச சபைக்கு வன்னாத்தவில்லு வட்டாரத்தில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர் நாணயச் சுழற்சியில் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் வன்னாத்தவில்லு வட்டாரத்தில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவரே இவ்வாறு நாணய சுழற்சியில் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் மாவட்டத்தின் வன்னாத்தவில்லு பிரதேச சபைக்கு வன்னாத்தவில்லு வட்டாரத்தில் போட்டியிட்ட தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் இரண்டு வேட்பாளர்களும் தலா 320 வாக்குகளைப் பெற்றுக்கொண்டனர்.

இதனையடுத்து, இரண்டு வேட்பாளர்களின் சம்மதத்துடன் அங்கு நாணயச் சுழற்சி இடம்பெற்றது.

குறித்த நாணயச் சுழற்சியில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் வெற்றி பெற்றதுடன், உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்த தேர்தலில் வன்னாத்தவில்லு பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தி 6 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி 5 ஆசனங்களையும், பொதுஜன பெரமுன 4 ஆசனங்களையும், முஸ்லிம் காங்கிரஸ், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி, தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகள் தலா ஒவ்வொரு ஆசனங்களையும் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வடக்கு, கிழக்கில் மைதானங்களை அமைப்பதற்கு அரசு நிதி ஒதுக்கீடு!

கொழும்பு, மே. 10

வடக்கு, கிழக்கில் மைதானங்களை அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு, கிழக்கில் மைதானங்கள் இல்லாத பகுதிகளில் அவற்றை அமைப்பதற்கு நிதி ஒதுக்கியுள்ளோம். கரப்பந்தாட்ட மைதானம் முதல் முழுமையான விளையாட்டரங்குகள் வரை அமைப்பதற்கு ஏற்பாடுகளை செய்துள்ளோம்.

விசேடமாக மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் மைதானங்களை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அந்தப் பகுதிகளில் திறமையான மாணவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு விளையாடுவதற்கு மைதானம் இல்லை என்பதை நாம் அறிந்துள்ளோம். ஆதலால் இந்தப் பகுதிகளில் மைதானங்களை அமைப்பதற்கு சுமார் 400 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

# 2 கோடி ரூபாய் கொள்ளை; சந்தேகநபர் கைதாகினார்

கொழும்பு, மே. 10

20,840,000 ரூபாய் பெறுமதியான பணம் மற்றும் தங்க நகைகளை கொள்ளையிட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரொருவரை மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சப்புகஸ்கந்த பொலிஸ் பிரிவில் துப்பாக்கியை காண்பித்து மிரட்டி இவ்வாறு 2 கோடியே 8 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் கொள்ளையிடப்பட்டிருந்தன.

இந்த சம்பவம் குறித்து மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன்படி, நேற்று முன் தினம் காலை கிரிந்திவெல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாஹேன சந்தியில் வைத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் கலகெடிஹேன பகுதியைச் சேர்ந்த 61 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடம் மேற்கொண்ட மேலதி விசாரணைகளில், கொள்ளையிடப்பட்டிருந்த மோதிரம் ஒன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சுயாதீன அரசு சட்டத்தரணிகள் அலுவலகத்தை நிறுவ ஒப்புதல்!

கொழும்பு, மே. 10

இலங்கையின் குற்றவியல் நீதி அமைப்பில் தாமதங்களைக் குறைப்பதற்கும் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதற்கும் ஒரு சுயாதீனமான அரசு சட்டத்தரணிகள் அலுவலகத்தை நிறுவுவதற்கான முன்மொழிவை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

அரசாங்கத்தின் தற்போதைய தேர்தல் அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள இந்த முயற்சி, சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து தனித்தனியாக மாகாண துணை அலுவலகங்களைக் கொண்ட ஒரு சட்டத்தரணிகள் அமைப்பை உருவாக்க முன்மொழிகிறது.

இந்த நடவடிக்கை பொது மக்களின் நம்பிக்கையை மேம்படுத்தவும் குற்றவியல் வழக்குகளை விரைவாகக் கையாளவும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

புதிய அலுவலகத்திற்குத் தேவையான சட்ட கட்டமைப்பை ஆய்வு செய்வதற்காக உயர் நீதிமன்ற நீதியரசரும் ஜனாதிபதி ஆலோசகருமான யசந்த கோத்தாகொட தலைமையிலான தொழில்நுட்ப நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சட்டங்களில் தேவையான திருத்தங்களையும் இந்தக் குழு பரிந்துரைக்கும்.

இந்த முன்மொழிவு, இலங்கையில் ஒரு சுயாதீன வழக்குரைஞர் அதிகாரத்தை அவசரமாக நிறுவுவதற்கு அழைப்பு விடுத்த, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் 2024 செப்ரெம்பரில் அளித்த பரிந்துரைகளுடன் ஒத்துப்போகிறது. (அ)

# அடுத்த கட்ட வரிப் பேச்சுக்கு இலங்கைக்கு அமெ. அழைப்பு!

## பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும

கொழும்பு, மே. 10

**ஏற்றுமதிகள் மீது விதிக்கப்படும் வரிகள் தொடர்பாக அமெரிக்காவுடனான அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்கு இலங்கை அழைக்கப்பட்டுள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் திருப்திகரமாக இருப்பதாக தெரிவித்த அமைச்சர், அமெரிக்காவுடன் சரியான நேரத்தில் உரையாடல்களில் ஈடுபட இலங்கையின் திறனே இதற்குக் காரணம் என்று கூறினார்.

ஏப்ரல் 2 ஆம் திகதி, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் 180 வர்த்தகப் பங்காளிகளை குறிவைத்து பரஸ்பர கட்டணங்களை அறிவித்தார்.

இதில் இலங்கை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு 44 வீத வரியும் அடங்கும்.

இருப்பினும், மிகவும் சாதகமான உடன்பாட்டை எட்டுவதை நோக்கமாகக் கொண்ட பேச்சுவார்த்தைகளை அனுமதிக்க, சீனாவைத் தவிர்த்து இந்த கட்டணங்கள் 90 நாட்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டன.

வரலாற்று ரீதியாக, அமெரிக்கா இலங்கையின் மிக முக்கியமான ஏற்றுமதி சந்தையாக இருந்து வருகிறது.2024 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த வணிக ஏற்றுமதியில் 23 வீதத்தை உள்வாங்கியுள்ளது.

2024 ஆம் ஆண்டில் அமெரிக்காவுக்கான இலங்கையின் ஏற்றுமதி 2.88 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது, மேலும் இந்த ஏற்றுமதிகளில் ஆடைத்துறை கணிசமான 70 வீதம் ஆகும்.

அதே ஆண்டில், இலங்கை அமெரிக்காவிலிருந்து 368.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்புள்ள பொருட்களை இறக்குமதி செய்தது.

இலங்கை மேற்கொண்டு வரும் முயற்சிகள் மற்றும் அமெரிக்காவுடன் வரி மற்றும் வரி அல்லாத பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கான நாட்டின் விருப்பங்களை கோடிட்டுக் காட்டி, ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க அமெரிக்க ஜனாதிபதியுடன் கடிதப் பரிமாற்றம் மூலம் தொடர்பு கொண்டதாக அமைச்சர் சூரியப்பெரும எடுத்துரைத்தார்.

அமெரிக்க வர்த்தக பிரதிநிதி அலுவலகத்துடன் இலங்கை இரண்டு சுற்று நேரடி பேச்சுவார்த்தைகளை வெற்றிக ரமாக முடித்துள்ளதாக அமைச் சர் மேலும் விளக்கினார். (அ)

# மின்சாரக் கட்டண சீராக்க ஆலோசனை 15ஆம் திகதி!

கொழும்பு, மே. 10

புதிய மின் கட்டண சீராக்கம் தொடர்பான ஆலோசனையை, இலங்கை மின்சார சபை எதிர்வரும் 15ஆம் திகதி இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டின் இரண்டாவது மின் கட்டண சீராக்கம் தொடர்பான ஆலோசனையாக இது அமையவுள்ளது.

இதன்படி புதிய மின்சார கட்டண சீராக்கம் எதிர்வரும் ஜூன் அல்லது ஜூலை மாதங்களில் அமுலாகும் என்று இலங்கை பொதுப் பயன்பா டுகள் ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# சம்பிக்கவின் மனு நிராகரிப்பு

கொழும்பு, மே. 10

தனக்கு எதிராக, சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகையை இரத்து செய்யுமாறு கோரி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இந்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இவ்வாறு நிராகரிகப்பட்டுள்ளது.

2016 இல் கொழும்பு இராஜகிரிய பிரதேசத்தில் வாகன விபத்தை ஏற்படுத்தி சாட்சிகளை மறைக்க முயன்ற குற்றச்சாட்டில் சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக சட்டமா அதிபரால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில் குற்றப் பத்திரிகையுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளமாறு கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# புதிய திருத்தந்தைக்கு ஜனாதிபதி வாழ்த்து



கொழும்பு, மே. 10

கத்தோலிக்க திருச்சபையின் புதிய திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்ட 14ஆம் சிங்கராயருக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தனது "எக்ஸ்" தளத்தில் வாழ்த்து தெரிவித்து பதிவொன்றை பதிவிட்டுள்ளார்.

அதில் "கத்தோலிக்க திருச்சபையின் புதிய தலைவராக தேர்வு செய்யப்பட்ட 14 ஆம் சிங்கராயருக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இப்பதவி மிகப்பெரிய பொறுப்பை உள்ளடக்கியது. விசுவாசிகளுக்கு வழிகாட்டும் உங்கள் செயல்களில் துணிவும் ஞானமும் இருக்க என வாழ்த்துகிறேன்.

உங்கள் தலைமையில் உலகமெங்கும் உள்ள மக்களுக்கு நம்பிக்கையும் ஆதரவும் கிடைக்கட்டும். இலங்கையின் சார்பில் உங்களுக்கு உளமார்ந்த வாழ்த்துகள்" என்று வாழ்த்து செய்தி தெரிவித்துள்ளார். (அ)

# ஜனாதிபதி வியட்நாமிலிருந்து திரும்ப அரச நிதி பயன்படுத்தப்படவில்லை!



கொழும்பு, மே. 10

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உள்ளிட்ட குழுவினர் வியட்நாமிலிருந்து விசேட விமானம் மூலம் நாட்டுக்கு வருகை தந்ததில் அரச நிதி பயன்படுத்தப்படவில்லை என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-வியட்நாமுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளுமாறு அந்நாட்டு அரசாங்கத்தினால் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதேநேரம் ஐக்கிய நாடுகள் சபையால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் வெசாக் தின நிகழ்வும் அங்கு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும் அங்கு உரையாற்றிய பின் உடனடியாக நாட்டுக்குத் திரும்பவேண்டும் என நாம் கூறியிருந்தோம்.

அதன் பிரகாரம் எமக்கு விசேட விமானம் ஏற்பாடு செய்யப்பட்டது.அதற்கான செலவை அந்நாட்டு பௌத்த சங்கமே ஏற்றுக்கொண்டது. நாம் அரச நிதியில் அங்கு சென்றிருந்தா லும் நாடு திரும்புவதற்கான செலவுக்கு அரச நிதி பயன்படுத் தப்படவில்லை-என்றார்.

# இலங்கை - இந்திய நட்புறவு சங்க தலைவராக நளிந்த!



கொழும்பு, மே 10

இலங்கையின் பத்தாவது பாராளுமன்றத்துக்கான இலங்கை - இந்திய பாராளுமன்ற நட்புறவு சங்கம் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன வின் தலைமையில், வியா ழக்கிழமை நிறுவப்பட்டது. இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இந்தக் கூட்டத்தில் கௌரவ விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு அரசியல் குழுக்கள், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட சுமார் 100 உறுப்பினர்கள் பங்கேற்றனர். இந்தக் கூட்டத்தின் போது, சுகாதாரம் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜே. சி. அலவதுவல, தனுர திஸநாயக்க, ரவி கருணாநாயக்க ஆகியோர் சங்கத்தின் பிரதி தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும், பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன் மற்றும் அனுஷ்கா திலகரத்ன ஆகியோர் உதவிச் செயலாளர்களாகவும், பெருந்தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தர லிங்கம் பிரதீப் சங்கத்தின் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்திய பாராளுமன்ற மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, இலங்கை - இந்திய பாராளுமன்ற நட்புறவு சங்கத்தை மீண்டும் கூட்டியதற்காக சபாநாயகருக்கும் சக எம்.பி.க்களுக்கும் வாழ்த்து தெரிவித்து சிறப்புக் கடிதம் அனுப்பியிருந்தார். (ஐ)

# அரசாங்கம் பொய் கூறி மக்களை ஏமாற்றியுள்ளது

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு



கொழும்பு, மே. 10

நாட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு முன்கொண்டு செல்வது என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ளவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்திலிருந்து விலகிக்கொள்வோம் என அரச தரப்பினர் தேர்தல் காலத்தில் கூறினார்கள். ஆனால் அவர்கள் அதே ஒப்பந்தத்தை கடைபிடிக்கிறார்கள்.

நாம் ஒப்பந்தத்தை மீற முடியாது. அவ்வாறாயின் அரசாங்கம்ஏன்பொய்கூற வேண்டும்?மின் கட்டணத்தை அதிக ரிப்பதற்கு அரசாங்கம் எதிர் பார்க்கிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இதனைக் கூறினார். ஆனபோதும் அமைச்சர்கள் அதனை மறுக்கின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்த விடயத்தில் அரசாங்கம் சிறைபிடிக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டுக்கு என்ன நடக்கப்போகிறது?மின் கட்டணத் திருத்தம் தொடர்பில் ஆகக்குறைந்தது பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தை கூட நடைமுறைப்படுத்த முடி யுமா என நான் கேட்கிறேன்-என்றார். (அ)

# தமிழர் ஆட்சி அமைவதற்காக தமிழ் அரசு கட்சிக்கு அழைப்பு

## தமிழ் மக்கள் விடுதலை புலிகள்

மட்டக்களப்பு, மே 10

**பல்வேறு விட்டுக் கொடுப்புக்கு மத்தியில் தமிழர்களின் ஆட்சியை உறுதி செய்வதற்கு இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு கிழக்கு தமிழர் கூட்டமைப்பு பகிரங்க அழைப்பு விடுப்பதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ. பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.**

கட்சி தலைமையகத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் மக்கள் எமக்கு வழங்கிய ஆணையின் பிரகாரம் 37 ஆசனங்கள் எமக்கு கிடைத்துள்ளன. இதனை மக்கள் எமக்கு வழங்கிய பெரும் ஆணையாகவே நாம் பார்க்கிறோம். இதனடிப்படையில் கிழக்கு மக்களுக்கு தனித்துவமான ஓர் அரசியல் குரல் தேவை என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

எமது கிழக்கு தமிழர் கூட்டமைப்பானது வாகரையில் ஏழு ஆசனங்களை பெற்றிருக்கிறோம். அதே போன்று மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்திலும் இரண்டு வட்டாரங்களை தம்வசப்படுத்தியதுடன் மண்முனை தென் மேற்கு பிரதேசத்தில் ஆறு ஆசனங்களைப் பெற்று கிழக்கு தமிழர் கூட்டமைப்பு முன்னிலையில் வகிக்கிறது.

இந்த அடிப்படையில் கிழக்கு தமிழர் கூட்டமைப்புக்கு மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையில் தமிழர்களின் ஆட்சியை உறுதிப்படுத்துவதற்காக இணைந்து செயல்படுவதற்காக இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு பகிரங்கமாக அழைப்பு விடுக்கிறோம்.

மக்களின் ஆணைக்கு கட்டுப்பட்டு தனிப்பட்ட அல்லது கட்சி விருப்பு வெறுப்புக்கு அப்பால் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் அனைவரும் ஒருமித்து பயணிக்க வேண்டும் என்பதை மக்கள் உணர்த்தியிருக்கின்றார்கள்.

இதன் அடிப்படையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கு கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு தமிழர்களின் ஆட்சியை உறுதி செய்வதற்காக அழைப்பு விடுக்கிறோம் - என்றார். (ஐ)



# அறுகம்குடா கடற்கரையை தூய்மையாக்கல் ஆரம்பம்!

பொத்துவில், மே 10

அருகம்குடா சுற்றுலா மண்டலம் அடுத்த வாரம் திறக்கப்படவுள்ள நிலையில் கடற்கரை பகுதியை தூய் மைப்படுத்தும் பணி நேற்று ஆரம்பமானது.

ஆசியாவின் நான்காவது பெரிய கடல் பாறை இங்குள்ளது. நீர் சறுக்கல் முதலான விளையாட்டுகளுக்கு ஏற்ற சூழல் நிலவுவதால் சுற்றுலாவிகளின் விருப்பத்துக்கு உரிய இடமாக அறுகம் குடா உள்ளது.

இந்த நிலையில், சுமார் 200 இராணுவத்தினர் இணைந்து கடற்கரை பகுதியை தூய்மைப் படுத்தும் நடவடிக்கையில் நேற்று ஈடுபட்டனர். இவர்களுடன் சுற்றுலா பயணிகளும் இணைந்து கொண்டனர். (ஐ)



# மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலய அலங்கார திருவிழா!

காரைதீவு, மே 10

பிரசித்தி பெற்ற நிந்தவூர் மாட்டுப்பளை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலய அலங்கார திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.

ஆலய வருடாந்த அலங்கார உற்சவ திருவிழா ஆலய பிரதம குரு சிவசிறீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் ஆலய குரு சிவசிறீ சபா கோவர்த்தன சர்மாவின் ஒத்துழைப்புடன் சிறப்பான முறையில் நடைபெறுகிறது.

கடந்த இரண்டாம் திகதி ஆரம்பமான இந்தத் திருவிழா நாளை மறுதினம் சித்திரா பௌர்ணமி அன்று சமுத்திர தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும். (ஐ)

# மணல் அகழ்வுக்கு எதிராக பொது மக்கள் போராட்டம்!

## பேச்சுக்கு சென்றவர்கள் கைதானமையால் பதற்றம்

வாழைச்சேனை, மே 10

மீன் வளர்ப்பு திட்டம் என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து வாழைச்சேனை - கிண்ணியடி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது, இருவர் கைது செய்யப்பட்டனர். இதையடுத்து, பதற்றம் ஏற்பட்ட போதிலும் அதிகாரிகளின் தலையீட்டை தொடர்ந்து அமைதி நிலை ஏற்படுத்தப்பட்டது.

தனியார் காணி ஒன்றில் கடந்த 2021ஆம் ஆண்டு மீன் வளர்ப்பு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, அங்கு மணல் அகழப்பட்டு கொண்டு சென்று விற்பனை செய்யப்பட்டது.

இதற்கு எதிராக அப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக போராட்டங்களில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து மணல் அகழ்வு நிறுத்தப்பட்டது. இந்த நிலையில், நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முதல் மீண்டும் மணல் அகழ்வு ஆரம்பமானது. இதற்கு எதிராகவே மக்கள் போராட்



டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மணலை ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்களை வீதியில் வழிமறித்து போராடிய மக்கள் "எங்கள் மண் வளத்தை அழிக்காதே", "சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுகிறது" என்று கோஷம் எழுப்பினர்.

இதனிடையே, பேச்சு நடத்தச் சென்ற இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

அதிகாரிகளின் தலையீட்டை தொடர்ந்து, அடுத்த மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டம் வரை மணல் அகழ்வை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டது. கைதானவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ஐ)

# பட்டா வாகனம் மோதி மின்கம்பம் முறிந்தது!

மட்டக்களப்பு, மே 10

வீதியை விட்டு விலகிய பட்டா வாகனம் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்கு உள்ளானது.

காத்தான்குடி மீரா பாலிகா மகளிர் கல்லூரிக்கு முன்பாக நேற்றுமுன்தினம் அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பில் இருந்து கிரான்குளத்துக்கு நண்டு ஏற்றிச் சென்ற பட்டா வாகனமே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது.



விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காதலித்த பெண்ணை தாக்கிய பொலிஸ் கான்ஸ்டபிள் கைது!

வாழைச்சேனை, மே 10

திருமணம் செய்யவிருந்த பெண்ணை தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஆயித்தியமலை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றுபவரே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான பொலிஸ் கான்ஸ்டபிள் அம்பாறையை சேர்ந்தவர். இவர் வாழைச்சேனையை சேர்ந்த பெண் ஒருவரை காதலித்து வந்துள்ளார். இருவரும் திருமணம் செய்துகொள்ளவிருந்தனர்.

இந்த நிலையில், விடுமுறையை களிக்க பெண்ணின் வீட்டுக்கு கடந்த புதன்கிழமை சென்றுள்ளார். இதன்போது, இருவருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, கான்ஸ்டபிள் அந்தப் பெண்ணை பலமாக தாக்கியுள்ளார். இதில், பெண் காயமடைந்து மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதையடுத்து, பொலிஸாருக்கு பெண் அளித்த முறைப்பாட்டை அடுத்து குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டார் என்று வாழைச் சேனை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# நிச்சயம் பழிவாங்குவோம் இறுதிவரை போர் தொடரும்

### பாகிஸ்தான் பிரதமர் மக்களுக்கு உரை

இஸ்லாமாபாத், மே 10

"பாகிஸ்தான் நிச்சயம் பழிவாங்கும். இந்தப் போரை இறுதிவரை முன்னெடுப்போம். என் பாகிஸ்தான் மக்களே, உங்கள் பாதுகாப்புக்காக, நமது இராணுவம் நிற்கும். நாம் எப்போதும் ஒற்றுமையாக இருப்போம்" - இவ்வாறு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் நாட்டு மக்களிடம் உரையாற்றிய அவர் கூறியவை வருமாறு, "இந்தியா நடத்திய தாக்குதலில் உயிர்நீத்த அப்பாவிகளின் இரத்தத்துக்கு பழிவாங்குவோம் என்று நாங்கள் உறுதி ஏற்றுள்ளோம். பாகிஸ்தான் தனது தற்காப்புக்காக ஒரு பயங்கரமான பதிலடியை வழங்க முடியும் என்பதை காட்டினோம். எல்லைப் பகுதியில், சுமார் ஒரு மணி நேரம் சண்டை நடந்தது. பாகிஸ்தான் விமானிகள் வான் வெளியில் இருந்து தாக்கினர், எதிரியின் விமானங்கள் நொறுங்கின.

பாகிஸ்தான் நிச்சயம் பழிவாங்கும். இந்தப் போரை இறுதிவரை எடுத்துச் செல்வோம். என் பாகிஸ்தான் மக்களே, உங்கள் பாதுகாப்புக்கு நமது இராணுவம் நிற்கும். நாம் எப்போதும் ஒற்றுமையாக இருப்போம். பாகிஸ்தான் பயங்கரவாதத்தால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் நம்மை நம் பாதையிலிருந்து விலக்கிவிடலாம் என்று நினைக்கிறார்கள்.



ஆனால், பாகிஸ்தான் ஒற்றுமையாக நிற்கிறது.

நமது மரியாதை, நமது பாதுகாப்பு, நமது இராணுவம், நமது தேசம் என நாம் ஒற்றுமையுடன் இருக்கிறோம். பாகிஸ்தானின் 24 கோடி மக்களும் விளைவுகளைப் பற்றி பயப்படவில்லை. அவர்கள் தைரியமானவர்கள், அவர்கள் இராணுவத்துடன் நிற்கிறார்கள். அவர்கள் எதிரிகளை எதிர்கொண்டு துணிச்சலுடன் அவர்களை எதிர்த்துப் போராடுவார்கள்.

சர்வதேச சட்டத்தின்படி, ஜம்மு - காஷ்மீர் ஒரு சர்ச்சைக்குரிய பிரதேசமாகும், மேலும், பொது வாக்கெடுப்பு நடைபெறும் வரை அது அப்படியே நீடிக்கும். இந்தியா எத்தனை ஒருதலைப்பட்ச முடிவுகளை எடுத்தாலும், யதார்த்தத்தை மாற்ற முடியாது" என்றார்.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியா "ஒப்ரேஷன் சிந்தூர்" என்ற தாக்குதல் நடவடிக்கையை முன்னெடுத்தது. 24 ஏவுகணைகள் இலக்கை தாக்கின. இதில், 70 பேர் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# இந்தியா - பாகிஸ்தான் போர் பதற்றம் உச்சத்தில்!



புதுடில்லி, மே 10

இந்தியா - பாகிஸ்தான் நாடுகள் பரஸ்பரம் ட்ரோன்கள், ஏவுகணைகள் மூலமாக இராணுவ தளங்களை குறிவைத்துத் தாக்கி வருகின்றன. தாக்குதல்கள் தொடர்பில் ஒரு நாட்டின் மீது மற்றைய நாடு பரஸ்பரம் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றன.

நேற்று முன்தினம் இரவு பாகிஸ்தான் ஜம்மு, உதம்பூர், பதன்கோட்டிலுள்ள தனது இராணுவ தளங்களை ட்ரோன், ஏவுகணைகள் மூலம் தாக்கியதாக இந்தியா சாடியுள்ளது. ஆனால், இதனை பாகிஸ்தான் மறுத்துள்ளது. இதனிடையே, ஜம்மு நகரில் குண்டுவெடிப்புகள் நிகழ்ந்தன என்றும் அந்தப் பகுதி இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இந்தியாவின் 25 ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளுது. இது குறித்து இந்தியா எதுவித கருத்தையும் தெரிவிக்கவில்லை. எனினும், பாகிஸ்தானின் வான் பாதுகாப்பை தாம் குறி வைத்ததாக இந்தியா கூறியுள்ளது. இந்தத் தாக்குதலில் லாகூரிலுள்ள ராடர்கள் அழிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானுக்கு சொந்தமான 3 போர் விமானங்களை சுட்டு வீழ்த்தியுள்ளதாகவும் அது தொடர்பான ஒளிப்படங்களையும் இந்தியா வெளியிட்டுள்ளது. இதேநேரம், இந்தியாவுக்கு சொந்தமான 5 போர் விமானங்களை சுட்டு வீழ்த்தியுள்ளதாக பாகிஸ்தான் கூறியுள்ளது.

இதனிடையே, இந்தியா, பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் போர் பதற்றம் அதிகரித்துள்ளது. இந்திய தலைநகர் புதுடில்லியிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. எல்லை நகரங்கள், கிராமங்களில் மக்களை வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் என்று இந்திய இராணுவம் அறிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீரின் சம்பா மாவட்டத்தில் இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்ற 7 பயங்கரவாதிகள் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

முன்னதாக, கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி இந்தியாவின் பஹல்காம் பகுதிக்குள் ஊடுருவிய பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் கொல்லப்பட்டனர்.

இதற்கு பதிலடியாக இந்தியா ஒப்ரேஷன் சிந்தூர் நடவடிக்கையை புதன்கிழமை நடத்தியது.

25 நிமிடங்கள் நடத்திய வான் தாக்குதலில் பாகிஸ்தானில் 7 பயங்கரவாதிகளின் முகாம்கள் தாக்கப்பட்டன. இந்தத் தாக்குதலில் 100 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தகுந்த பதிலடி கொடுப்போம்!

### இந்தியா பதில்

புதுடில்லி, மே 10

"எல்லை தாண்டிய தீவிரவாதத்துக்கு எதிராக பதில் தாக்குதலை இந்தியா கொடுக்கும்", என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியா, பாகிஸ்தான் இடையே சமரசம் ஏற்படுத்த அமெரிக்கா முயற்சி மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக, வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் பாகிஸ்தான் பிரதமர் ஷபாஸ் ஷெரீப் ஆகியோரை தொடர்பு கொண்டு அமெரிக்க வெளிவிவகார செயலாளர் மார்கோ ரூபியோ பேசியுள்ளார்.

இந்நிலையிலேயே இந்திய வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும், "அமெரிக்க வெளிவிவகார செயலாளர் மார்கோ ரூபியோ உடன் பேசினேன். தீவிரவாதத்துக்கு எதிரான இந்தப் போராட் டத்தில் இந்தியாவுடன் இணைந்து பணியாற்றுவதற் கான அமெரிக்காவின் உறு தியை பாராட்டுகிறேன். எல்லை தாண்டிய தீவிரவாதத்துக்கு இந்தியா தகுந்த பதிலடியை கொடுக்கும் என்பதை அவரிடம் சுட்டிக்காட்டி பேசியுள்ளேன். அதில் உறுதி யாக உள்ளோம் என்பதை தெரிவித்துள்ளேன்" - என்றும் கூறினார். (ஐ)

# 15 இந்திய நகரங்களை குறிவைத்து தாக்குதல்!



புதுடில்லி, மே 10

ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், குஜராத் மாநிலங்களில் 15 நகரங்களை குறிவைத்து பாகிஸ்தான்நடத்திய ஏவுகணை, ட்ரோன் தாக்குதல்களை வெற் றிகரமாக முறியடித்ததாக இந்தியா தெரிவித்துள்ளது.

அத்துடன், லாகூர் உட்பட பல இடங்களில் அமைக்கப்பட்டிருந்த வான் பாதுகாப்பு ராடர்கள் அழிக்கப்பட்டன என்றும் இந்தியா அறிவித்துள்ளது.

# காஸாவில் தாக்குதல்: 16 பேர் பலி!

காஸா, மே 10

காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 16 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர் என்று பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தெற்கு காஸாவில் கட்டடம் ஒன்றை குறிவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பொதுமக்கள் என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

காஸா மீது இஸ்ரேல் முன்னெடுத்துள்ள தாக்குதல்களில் இதுவரை 52 ஆயிரத்து 600 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 14ஆம் லியோவின் தெரிவு நாட்டுக்கான மரியாதை!

### அமெரிக்க ஜனாதிபதி வாழ்த்து

வாஷிங்டன், மே 10

அமெரிக்கரான றொபேர்ட் பிரான்சிஸ் பிரிவோஸ்ட் திருத்தந்தை 14ஆம் லூயி தெரிவு செய்யப்பட்டமை நாட்டுக்கு கிடைத்த மிகப்பெரிய மரியாதை என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மேலும் அவரை சந்திக்க ஆவலுடன் தான் ஆவலுடன் இருக்கிறார் என்றும் குறிப்பிட்டுள்ளார். திருத்தந்தை 14ஆம் லூயி அமெரிக்காவின் சிகாகோவில் பிறந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. அமெரிக்கர் ஒருவர் திருத்தந்தையாக தெரிவாகியி ருக்கின்றமை இதுவே முதலா வது சந்தர்ப்பம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே திருத்தந்தை 14ஆம் லூயிக்கு உலக நாடுகளின் தலைவர்கள், மதத் தலைவர்கள் பலரும் வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

அடுத்த 20 ஆண்டுகளுக்குள்-

# 99 வீத சொத்துகளை நன்கொடை அளிப்பதற்கு பில்கேட்ஸ் திட்டம்!

நியூயோர்க், மே 09

மைக்ரோசொப்ட் நிறுவுநர் பில் கேட்ஸ் தனது பெரும் சொத்துகளில் 99 சதவீதத்தை அடுத்த 20 ஆண்டுகளுக்குள் நன்கொடையாக வழங்கத் திட்டமிட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

தனது அறக்கட்டளையின் செயல்பாடுகளை 2045ஆம் ஆண்டுக்குள் முடிவுக்குக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளதாகக் கூறியுள்ள அவர் தனது நன்கொடையை விரைவுபடுத்தப் போகிறார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"நான் இறக்கும்போது மக்கள் என்னைப் பற்றி நிறைய விடயங்களை சொல்வார்கள். ஆனால், "அவர் பணக்காரராக இறந்தார்" என்று கூறமாட்டார்கள். அதில், நான் உறுதியாக இருக்கிறேன்", என்று பில் கேட்ஸ் தனது வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

69 வயதான பில்கேட்ஸ் சுகாதாரம் மற்றும் மேம்பாட்டு திட்டங்களுக்கு 10 ஆயிரம் கோடி டொலர்களை வழங்கியுள்ளார். அடுத்த இருபது ஆண்டுகளில் இதனை 20 ஆயிரம் கோடி டொலராக செலவிட எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

உலகின் ஐந்தாவது பணக்காரராக தற்போது உள்ள பில்கேட்ஸின் நிகர சொத்து மதிப்பு 10 ஆயிரத்து 800 கோடி டொலர்களாகும். இது அடுத்த 20 வருடங்களில் பணவீக்க அடிப்படையில் 20 ஆயிரம் கோடியாக இருக்கும் என்று கணிப்பிடப்படுகிறது.

# இந்திய டெஸ்ட் அணியின் தலைவராகிறார் ஷுப்மன்



புதுடெல்லி, மே 10

இந்தியாவின் டெஸ்ட் அணித் தலைவராக ஷுப்மன் கில் நியமிக்கப்பட அதிக வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்திய அணியின் தலைவரான ரோஹித் சர்மா டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். முன்னதாக, 2024 ரி-20 உலகக் கிண்ணத்தை வென்ற பின்னர் சர்வதேச இருபது - 20 போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார்.

ஒருநாள், டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வந்த நிலையில் அவர் டெஸ்ட் தொடரிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ரோஹித் சர்மாவை அணித் தலைவராக நியமிக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை முன்வராததே ஓய்வுக்கு காரணம் என்று கூறப்பட்டது.

இந்த நிலையில், ஷுப்மன் கில்லை அணித் தலைவராக நியமிக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை பரிசீலித்து வருவதாகக் கூறப்படுகிறது. பும்ராவை தலைவராக நியமிக்க வாய்ப்பு இருந்த நிலையில், அவர் அடிக்கடி காயத்துக்கு உள்ளாவதால் அவரை நியமிப்பதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தயக்கம் காட்டுகிறது என்றும் கூறப்பட்டது.

இதனிடையே, ஷுப்மன் கில் இந்திய ஒருநாள் அணிக்கு உபதலைவராக செயல்பட்டு வருகிறார். மேலும், ஐ.பி.எல் தொடரில் குஜராத் அணியின் தலைவராக உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



போர் பதற்றத்தால்

# ஐ. பி. எல். போட்டிகள் இடைநிறுத்தப்பட்டன

புதுடில்லி, மே 10

இந்தியா - பாகிஸ்தான் போர் பதற்றம் காரணமாக ஐ. பி. எல். போட்டி தொடர் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்த முடிவை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் நடந்த பஞ்சாப் கிங்ஸ், டில்லி கப்பிட்டல்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டி இடையிலேயே கைவிடப்பட்டது. தர்மசாலாவின் விமான நிலையம் உள்ளிட்ட இடங்களில் தாக்குதல் அச்சம் காரணமாக இந்தப் போட்டி இடைநிறுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து, நேற்று காலை கிரிக்கெட் வீரர்கள் மற்றும் அணிகளை சேர்ந்தவர்கள் சிறப்பு ரயில் மூலமாக டில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஐ. பி. எல். தொடரில் 58 போட்டிகள் நிறைவடைந்துள்ளன. இன்னமும் 12 போட்டிகள் மீதமுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இத்தாலி ஓப்பின் ரென்னிஸ்; விலகினார் பவுலா படோசா

ரோம், மே 10

ஸ்பெயினின் பவுலா படோசா காயம் காரணமாக இத்தாலி ஓப்பின் ரென்னிஸ் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

இத்தாலி ஓப்பின் ரென்னிஸ் தொடர் ரோமில் நடக்கிறது. இதில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் விளையாடி வரும் ஸ்பெயினின் பவுலா படோசா 2ஆவது சுற்றுக்கு நேரடியாக தகுதி பெற்றிருந்தார்.

நேற்று முன்தினம் நடந்த 2ஆவது சுற்றில் ஸ்பெயினின் பவுலா படோசா ஜப்பானின் நவோமி ஒசாகா உடன் மோதவிருந்தார். அவர், காயம் காரணமாக போட்டியில் இருந்து திடீரென விலகினார்.

பவுலா படோசா தரவரிசையில் 10ஆவது இடத்தில் நீடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



# சிம்பாவேயுடனான டெஸ்ட் இங்கிலாந்து வீரர் விலகல்

லண்டன், மே 10

சிம்பாவேக்கு எதிரான டெஸ்ட் போட்டியிலிருந்து இங்கிலாந்தின் ஜோர்தன் கொக்ஸ் விலகியுள்ளார்.

சிம்பாவே கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கு சென்று ஒரு டெஸ்ட் போட்டியில் (4 நாள் ஆட்டம்) விளையாடவுள்ளது. இந்தப் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி நாட்டிங்ஹாமில் நடைபெறவுள்ளது.

இந்த அணியின் தலைவராக பென் ஸ்ரோக்ஸ் அறிவிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், ஜோர்தன் கொக்ஸ் இந்தப் போட்டியிலிருந்து விலகியுள்ளார். அவருக்கு பதிலாக ஜேம்ஸ் ரெவ் இங்கிலாந்து அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து அணி விவரம்: பென் ஸ்ரோக்ஸ் (அணித் தலைவர்), கஸ் அட்கின்சன், ஷோயப் பஷீர், ஹாரி புரூக், சாம் குக், ஜேம்ஸ் ரெவ், ஜேக் க்ராவ்லி, பென் டக்கட்,



ஒல்லி போப், மத்தியூ பட்ஸ், ஜோ ரூட், ஜேமி ஸ்மித், ஜோஷ் டங். (ஐ)

PSL
Pakistan Super League

# ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு பி. எஸ். எல். தொடர் மாற்றம்!

கராச்சி, மே 10

பி. எஸ். எல். எனப்படும் பாகிஸ்தான் சுப்பர் லீக் போட்டி தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு மாற்றப்பட்டுள்ளது.

6 அணிகள் பங்கேற்றுள்ள 10ஆவது பி. எஸ். எல். தொடர் கடந்த ஏப்ரல் 11ஆம் திகதி ராவல்பிண்டி, கராச்சி, முல்தான், லாகூர் ஆகிய நகரங்களில் நடந்து வருகிறது.

இந்த நிலையில், இந்தியா - பாகிஸ்தான் போர் பதற்றம் காரணமாக பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடர் ஒத்தி வைக்கப்பட்டது. இந்த நிலையிலேயே, மீதமுள்ள போட்டிகளை ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவெடுத்துள்ளது.

இதனிடையே, பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் இன்னும் 4 லீக் போட்டிகள் மற்றும் 4 பிளே ஒவ் போட்டிகள் என 8 போட்டிகள் மீதமுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இத்தாலி ஓப்பின் ரென்னிஸ் நவோமி, இகா முன்னேற்றம்!

ரோம், மே 10

இத்தாலி ஓப்பின் ரென்னிஸ் தொடரில் ஜப்பானின் நவோமி ஒசாகா, போலந்தின் இகா ஸ்வியாரெக் ஆகியோர் அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.

இத்தாலி ஓப்பின் ரென்னிஸ் தொடர் ரோமில் நடக்கிறது. இதில், பெண்கள் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்றில் ஜப்பானின் நவோமி ஒசாகா, சுவிற்சர்லாந்தின் விக்ரோறியாவுடன் மோதினார்.

இதில் முதல் செற்றை 2-6 என இழந்த நவோமி ஒசாகா, அடுத்த இரு செற்களையும் 7-5, 6-1 என்ற கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் போலந்தின் இகா ஸ்வியாடெக் 6-1, 6-0 என்ற செற் கணக்கில் இத்தாலியின் எலிஸ் பெட்டாவை வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.



# தென்னாபிரிக்காவை வீழ்த்தியது இந்தியா!

கொழும்பு, மே 10

இலங்கை, இந்தியா, தென்னாபிரிக்கா மகளிர் கிரிக்கெட் அணிகள் பங்கேற்கும் முத்தரப்பு தொடர் இலங்கையில் நடக்கிறது.

இதில், இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் நேற்று முன்தினம் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய மகளிர் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 337 ஓட்டங்கள் சேர்த்தது.

தனது 2ஆவது சதத்தை விளாசிய ஜெமிமா ரோட்ரிக்ஸ் 101 பந்துகளில், ஒரு சிக்ஸர், 15 பௌண்ட்ரிகளுடன் 123 ஓட்டங்களும் தீப்தி சர்மா 84 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 10 பௌண்ட்ரிகளுடன் 93 ஓட்டங்களும் விளாசினர்.

338 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க மகளிர் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 314 ஓட்டங்கள் சேர்த்து தோல்வி அடைந்தது.

அதிகபட்சமாக அன்னெரி டெர்க்சன் 81, சோலி டிரையோன் 67 ஓட்டங்களை எடுத்தனர். (ஐ)

## 7மாதங்களில்...

சம்பவங்களில் 35 பேர் காயமடைந்தனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 62 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவை. துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தொடர்பில் 260 பேர் கைது செய்யப்பட்டுள்னர். இவர்களில் 229 பேர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## தமிழ் அரசியல்...

அறிக்கைகளின் ஊடாக முன்வைக்கப்படும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக வேலைத் திட்டமொன்றை தயாரித்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியவை வருமாறு,

நாட்டின் பிரதான சட்டமாகவுள்ள அரசமைப்பின் முக்கிய அம்சங்களை அமுல்படுத்துமாறு சுமார் 38 ஆண்டு காலமாக தேசிய மற்றும் சர்வதேச சமூகம் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில்தான் இந்த நாடு உள்ளது. இவ்வாறான பிரேரணைகளை கொண்டு வந்து அரசாங்கத்தின் படுமோசமான செயல்பாடுகளை தடுப்பதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.

ஆய்வு அறிக்கைகளின் பரிந்துரைகளை கடந்த அரசாங்கங்கள் செயல்படுத்தவில்லை என்று குற்றஞ்சாட்டி, பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நாட்டு மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆணையை வழங்கினார்கள்.

கடந்த கால ஆய்வு அறிக்கைகளை கருத்தில் கொண்டு தேசிய மக்கள் சக்தி மிக மோசமான பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்து செய்வதாகவும் அதற்கு மாற்றீடாக பிறிதொரு சட்டத்தை இயற்றப் போவதில்லை என்றும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தார்.

பயங்கரவாத தடைச் சட்டம் இன்றும் நடைமுறையில்தான் உள்ளது. 12 அல்லது 13 தமிழ் அரசியல் கைதிகள் இன்றும் சிறையில் உள்ளார்கள். இந்த சட்டத்தின் பிரகாரம் தவறாக கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதற்கு அரசாங்கம் தயாரில்லை.

எஸ்.கிருபாகரன் எனும் அரசியல் கைதி தொடர்பில் இந்த பாராளுமன்றத்தில் பலமுறை பேசியுள்ளேன். அம்பாந்தோட்டை சிறைச்சாலைக்கு அவர் மாற்றப்பட்டுள்ளார். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒரு வழக்கில் நிராகரிக்கப்பட்டு, அந்த வாக்குமூலம் வலுக்கட்டாயப்படுத்தல் முறையில் பெறப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டு வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார். இதன் பின்னர் அந்த நிராகரிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாகக் கொண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு கிருபாகரன் இன்றும் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவரின் வழக்குகள் கொழும்பு நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள நிலையில் நியாயமற்ற வகையில் அம்பாந்தோட்டைக்கு கொண்டு செல்லப்பட்டு சிறையில் வாடுகிறார்.

இதேபோல், ஆனந்தவர்மன் என்றழைக்கப்படும் அரவிந்தன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். மிகமோசமான பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை அரசாங்கம் உடனடியாக விடுவிக்க வேண்டும் - என்றார். (ஐ)

## தமிழ் சிறுமி...

குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியர் புத்தளத்திலுள்ள பாடசாலை ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

இதனிடையே, குற்றவாளிக்கு தண்டனை கோரியும் மரணத்துக்கு நீதி கோரியும் கொழும்பு முழுவதும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், பொலிஸாரின் பி அறிக்கை கிடைத்ததாகவும் இதற்கமைய சந்தேகநபரான ஆசிரியரை நிறுவன கோவைச் சட்டத்தின் பிரகாரம் கட்டாய விடுமுறையில் அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும், இந்த சம்பவம் தொடர்பான ஆரம்பகட்ட விசாரணைகள் தற்போது நடைபெறுகின்றன. விசாரணை அறிக்கை கிடைத்தவுடன் முறையாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவித்துள்ளார்.

இந்த ஒட்டுமொத்த சம்பவத்திலும் ஏதாவதொரு தரப்பு அவர்களின் கடமைகளை நிறைவேற்ற தவறியுள் ளார்களா என்பது தொடர்பில் தேடிப் பார்ப்பதற்கு அமைச்சால் உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ)

## உள்ளூராட்சி...

தொடர்பில் அவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியுடனும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனும் நாம் தொடர்ந்து பேசி வருகிறோம். தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளருடன் சனிக்கிழமையும் (இன்றும்) இது தொடர்பில் பேசவுள்ளோம். இதேபோன்று, அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமாருடனும் பேசவுள்ளோம். இதன் பின்னர் நாம் முடிவை அறிவிப்போம் - என்றார்.

இதேவேளை, மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயல்பட தமிழ் அரசுக் கட்சி விடுத்த அழைப்பு தொடர்பில் கேட்டபோது,

“மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயல்படுவதில் ஆட்சேபனையில்லை. ஆனால், மீண்டும் இணைவது குறித்து சரியான செயல்திட்டங்கள் முன்வைக்கப்படுவது அவசியம்” - என்றும் கூறினார். (ஐ)

## மன்னாரில்...

மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்ட விடயத்தைத் தெரியப்படுத்தினார்.

மேலும், நாட்டு மக்கள் எதிர்பார்த்த சிறந்த அரசியல் கலாசாரத்தை நாங்கள் உருவாக்கியுள்ளோம். கப்பம் பெறல், இலஞ்சம் வழங்கும் அரசியல் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளோம். அமைச்சர்கள் மற்றும் ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட சலுகைகள் ஏதும் வழங்கப்படவில்லை.

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஒருநாள் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு “முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் மன்னாரில் மதுபானசாலை ஒன்றை அமைப்பதற்கு அனுமதிப்பத்திரம் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அதற்காக 8 கோடி ரூபாய் இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாகவும்” குறிப்பிட்டார். இந்த விடயம் தொடர்பில் முறைப்பாடளிக்குமாறு ரிஷாத் பதியுதீனிடம் குறிப்பிட்டேன் - என்றார். (ஐ)

# “ஐக்கிய மக்கள் சக்தி கட்சியிலிருந்தே கொழும்பு மாநகர மேயர் தெரிவாவார்!”

கொழும்பு, மே 11

கொழும்பில் போட்டியிட்ட ஏனைய தரப்பினருடன் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றிகரமான பேச்சுகளை முன்னெடுத்து வருகிறது. அதற்கமைய ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்தே கொழும்பு மேயர் தெரிவு செய்யப்படுவார் என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு கூறினார். மேலும்,

தோல்வியடைந்த மன்றங்களில் சுயேச்சை குழுக்களின் ஆதரவுடன் சபைகளை நிறுவுவதற்கான முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது. தம்மை தவிர ஏனைய அனைவரும் கள்வர்கள் என்பதே தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரம். சுயேச்சை குழுக்களும் கள்வர்கள்தான் எனக் கூறிய அரசாங்கம் எவ்வாறு தற்போது அவர்களின் ஒத்துழைப்பை கோர முடியும்? - என்றும் கேட்டார்.

## சிறார்...

தடுப்பதற்கும் அவை தொடர்பில் விசாரணை நடத்துவதற்கும் மகளிர், சிறுவர் விவகார அமைச்சு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, பொலிஸ் திணைக்களம் ஆகியன இணைந்ததான பொறிமுறை ஒன்றை நாம் அறிமுகம் செய்வோம்”, என்றார்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் 16 வயது மாணவி ஆசிரியரால் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டார் இதன் பின்னர் அந்த மாணவி தவறான முடிவு எடுத்து உயிரிழந்தார். இது தொடர்பில் பாராளுமன்றில் நேற்று பேசப்பட்டபோதே பிரதமர் மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார். (ஐ)

## தமிழ்த்...

வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையான சபைகளை கைப்பற்றி - ஆட்சி அமைப்பதற்கு முதல் நிலையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி இருக்கிறது. அவ்வாறு எமக்கு வாக்களித்து எம்மை அங்கீகரித்து - ஏற்றுக்கொண்ட - எமக்கு ஊக்கமளித்த - தமிழ்த் தேசியத்தை நேசிக்கின்ற அனைவருக்கும் வடக்கு, கிழக்கில் வாழும் மக்கள் எல்லோருக்கும் கட்சி சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் மீண்டெழுவதற்கான வாய்ப்பைத் தந்த வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி கூறுகின்றோம். மிகக் கேவலமாக தேர்தல் காலத்தில் எங்களை எதிர்த்து போட்டியிட்டு இல்லாதவற்றை சொல்லி, தங்களின் மகிழ்ச்சியை கொண்டாடியவர்கள் இப்போது நாங்கள் தேசிய மக்கள் கட்சியோடு ‘டீல்’ பேசுகிறோம் என்று பொறுப்புள்ளவர்களே குறிப்பிட்டு பேசுகிறார்கள். தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் என்ற முறையில் பொறுப்போடு இதனை நான் மறுதலிக்கிறேன்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி தேசிய மக்கள் சக்தியோடு இணைந்து ஆட்சி அமைப்பதற்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை. எந்த டீலையும் செய்யவில்லை. இந்த பரப்புரைகள் வேலை செய்யாது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். தேசிய மக்கள் சக்தியின் முக்கிய பிரமுகர் நளிந்த ஜயதிஸ்ஸகூட தங்களை தமிழ் கட்சிகள் அணுகவில்லை என்பதை கூறியிருக்கிறார்.

அடுத்த கட்ட செயல்பாடுகளை ஆராய்வதற்காக (இன்று) சனிக்கிழமை அரசியல் குழு கூடி, எந்தெந்த சபைகளில் எவ்வாறு செயல்படுவது, யார் யாரை முன்னிலைப்படுத்தி தவிசாளர், முதல்வரை தீர்மானிப்பது என்பது தொடர்பில் கலந்துரையாடவுள்ளோம். ரெலோ, புளோட் கட்சிகளின் தலைவர்கள் எங்கள் கட்சியின் பதில் பொதுச் செயலாளருடன் பேசியுள்ளார்கள். செல்வம் அடைக்கலநாதன் தமிழ் தேசிய கூட்டமைப்பாக செயல்பட விருப்பம் தெரிவித்துள்ளார். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உட்பட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயல்பட்ட கட்சிகள் மீண்டும் செயல்பட முன்வர வேண்டும் - என்றார். (ஐ)

## ஹெலிகொப்டர்...

பிரிவுக்கு சொந்தமானாதாகும். இது, நேற்று வெள்ளிக்கிழமை காலை 6.44 மணியளவில் ஹிங்குராங்கொடை விமானப் படைத் தளத்திலிருந்து புறப்பட்டது.

காலை 7. 08 மணியளவில் மாதுறு ஓயா பகுதியில் ஹெலிகொப்டரில் 6 இராணுவத்தினர் ஏற்றப்பட்டனர். இதனால் விமானிகள் இருவர் உள்பட 6 விமான படையினருடன் 12 பேர் ஹெலிகொப்டரில் இருந்தனர்.

அந்தச் சமயம், ஹெலிகொப்டரில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறால் அவசரமாக ஹெலிகொப்டர் தரையிறக்கப்பட்டது. அப்போது, அது மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தில் விழுந்து.

படையினர் உடனடியாக மீட்பு நடவடிக்கையை மேற்கொண்டனர். விபத்தில் சிக்கிய 12 பேரும் மீட்கப்பட்டு, அரலகங்வில பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் 8 பேர் பொலநறுவை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

எனினும், மீட்கப்பட்டவர்களில் 6 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் நால்வர் இராணுவத்தின் விசேட படை படைப்பிரிவை சேர்ந்தவர்களாவர். இருவர், விமானப் படையை சேர்ந்தவர்கள்.

இந்த விபத்து குறித்து விசாரிக்க 9 பேர் கொண்ட குழுவை விமானப் படைத் தளபதி எயார் மார்ஷல் பந்து எதிரிசிங்க நியமித்துள்ளார். (ஐ)

## எனது...

தயாசிறி ஜயசேகர தெரி வித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதித் தேர்தலின் போது தற்போதை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கடந்த ஆட்சிக் காலத்தில் வீதிகளில் துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்படுவது தொடர்பில் கடுமையாக பேசியதுடன், தமது ஆட்சியில் சட்டவாட்சியை உறுதி செய்வோம் என்று கூறியிருந்தார். ஆனால் கடந்த 7 மாதங்களில் 43 .இற்கும் அதிகமான துப்பாக்கிச் சூடுகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 30இற்கும் அதிகமானோர் உயிரிழந்தனர், பலர் காயமடைந்துள்ளனர். இந்த நாட்டின் சட்டவாட்சி வீழ்ச்சியடைந்து வீதிகளில் மக்கள் கொல்லப்படுகின்றனர்.

தினமும் வீதிகளிலும் வீடுகளுக்குள்ளும் கொலை சம்பவங்கள் பதிவாகின்றன. பாதாள உலகக் குழுக்கள் மோதிக் கொள்கின்றனர். மேலும் பாதாள குழுக்களின் ஊடாக மற்றையவர்களும் கொல்லப்படுகின்றனர். தென் மாகாணத்திலும் மேல் மாகாணத்திலுமே அதிகளவான சம்பவங்கள் நடக்கின்றன. நாட்டின் பாதுகாப்பும் மற்றும் சட்டவாட்சியும் அழிவை நோக்கி போகின்றன. இவற்றை இங்கு பேசுவதால் எனது உயிருக்கும் ஆபத்து நேரலாம்.

யுக்திய நடவடிக்கையின் போது பாதாள உலகக் குழுக்களின் முக்கிய தரப்பினர் தலைமறைவாகயிருந்தனர். சிலர் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றிருந்தனர். இவர்கள் வெளிநாடுகளில் இருந்துகெண்டு கொலைகள் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். இதேவேளை அப்பாவிகளும் உயிரிழக்கின்றனர். இதில் நெருக்கடிகளுக்குள் நாடு தள்ளப்படுகின்றது. போதைப் பொருட்கள் தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுப்பதில் தடுமாறுகின்றனர். இது தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறோம் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# வாக்கு வேட்டைக்காக கசிப்பு வழங்கியதா தமிழரசுக் கட்சி?

## நிரூபிக்கக் கோருகிறார் சுமந்திரன்



யாழ்ப்பாணம், மே. 10

"கசிப்பும் பணமும் கொடுத்து தமிழ் அரசுக் கட்சி வாக்கு சேகரித்து என்பதை அமைச்சர் பிமல் ரட்நாயக்க நாடாளுமன்றுக்கு வெளியில் வந்து ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டவேண்டும்" இவ்வாறு வலியுறுத்தி சவால் விடுத்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

பிமல் ரத்நாயக்காவின் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் விதத்தில் கருத்து வெளியிட்டுள்ள சுமந்திரன், "சலுகைகளுக்காக வாக்களிப்பவர்கள் தமிழ் மக்கள் என்று பிழையான எண்ணத்தை அவர் கொண்டுள்ளார். நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் கடும் ஆவேசத்துடன் பேசிய பிமல் ரட்நாயக்க, இலங்கை தமிழ் அரசுக் கட்சி கசிப்பும் பணமும் வழங்கி தேர்தலில் அதிகளவு வாக்குகளை பெற்றதாக குறிப்பிட்டார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி சாத்வீகக் கட்சி மாத்திரமல்ல, சமூக அக்கறையுள்ள கட்சியு ரகும். அது அமைச்சர் பிமல் ரத்நா யக்காவுக்கு தெரியவில்லை." என்று குறிப்பிட்டார்.

75 ஆண்டுகளுக்கு மேலான தமிழ் அரசுக் கட்சியின் வரலாற்றை அமைச்சர் பிமல் ரத்நாயக்கா எடுத்துப் பார்க்க வேண்டும்.

மது ஒழிப்புக்காக இயக்கத்தை கட்சி கொண்டுள்ளதுடன், இது தொடர்பில் பல விழிப்புணர்வு நடவ டிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது." எனவும் சுமந்திரன் குறிப்பிட்டார். (அ)

# மாணவியின் மரணத்துக்கு நீதிகோரி மாணவர்கள் அமைதிப் போராட்டம்!



கொழும்பு, மே. 10

16 வயதுடைய மாணவி டில்ஷி அம்ஷிகாவின் மரணத்துக்கு நீதிகோரி நேற்று வெள்ளிக்கிழமை மாணவர்கள் அமைதியான முறையில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற போராட்டத்தின் தொடர்ச்சியாக கொழும்பு, கொட்டாஞ்சேனை, ஜோர்ஸ் ஆர் சில்வா மாவத்தை வீதியில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் நடை பவனியாக காலி முகத்திடலுக்குச் சென்றனர். (அ)

# இரட்டைக்கொலை தொடர்பில் மேலும் 3 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, மே 10

மீட்டியாகொடையில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட டமை தொடர்பில் மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான மூவரும் மீட்டியா கொடை, கஹவ பகுதிகளை சேர்ந்த 27, 40, 44 வயது நபர்களாவர்.

காலி - மீட்டியாகொடை - தம்பஹிட்டிய பிரதேசத்தில் கடந்த 3ஆம் திகதி இரு மோட்டார் சைக்கிள்களில் சென்றவர்கள் இருவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி விட்டு தப்பிச் சென்றனர்.

இதில் காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தனர். இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் மூவரை கைதுர் செய்தனர். ஏற்கனவே, இந்த சம்பவம் தொடர்பில் மீட்டியா கொடை இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் கடந்த செவ் வாய்க்கிழமை மூவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழ். பொலிஸ் கான்ஸ்டபிள் வாவியில் மூழ்கிய மரணம்!

கொழும்பு, மே. 10

அநுராதபுரம் - கெப்பித்திகொல்லாவ வாவியில் மூழ்கி காணாமல்போயிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கெப்பித்தி கொல்லாவ பொலிஸார் தெரிவித்தனர்.

கெப்பிற்றிக்கொல்லாவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் யாழ்ப்பாணம் பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே உயிரிழந்துள்ளார். பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று முன்தினம் கெப்பித்திகொல்லாவ வாவியில் நீராடிக்கொண்டிருந்துள்ள நிலையில் திடீரென நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது காணாமல்போன பொலிஸ் கான்ஸ்டபிளின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கெப்பித்திகொல்லாவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பாலியல் இலஞ்சம் கோரிய அதிகாரிக்கு 20 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை

கொழும்பு, மே. 10

ஏழு வயது குழந்தையின் சிறுநீரக அறுவை சிகிச்சைக்காக அரசாங்கத்திடமிருந்து வழங்கப்படும் நிதியுதவியைப் பெறுவதற்கு தேவையான அனுமதியை வழங்குவதற்காக, 30 வயது மூன்று குழந்தைகளின் தாயிடம் பாலியல் இலஞ்சம் கோரிய திவி நெகும சமூக அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு, கொழும்பு மேல் நீதிமன்றம் 20 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது.

எனினும், இந்த சிறைத்தண்டனை 10 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று தீர்ப்பை வழங்கிய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே உத்தரவிட்டார்.

இதுதவிர, பிரதிவாதியின் வாக்குரிமை உட்பட சிவில் உரிமைகள் ரத்து செய்யப்படுவதாகவும், இதனை தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

மேலும், பிரதிவாதிக்கு 20,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

தீர்ப்பை வழங்கிய நீதிபதி, அரச உத்தியோகத்தராக இருந்து கொண்டு, இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்ணிடம் பாலியல் இலஞ்சம் கோரியது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று குறிப்பிட்டார். இந்தக் குற்றத்தின் தீவிரத்தன்மையை கருத்தில் கொண்டு, லேசான தண்டனை விதிக்க முடியாது என்றும், அதன்படி இந்தத் தண்டனை விதிக்கப்படுவதாகவும் நீதிபதி தெரிவித்தார்.

2015 மார்ச் 31 அன்று, சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட தனது ஏழு வயது குழந்தைக்கு அறுவைச் சிகிச்சை செய்ய அரசாங்கத்தின் நிதியுதவியைப் பெறுவதற்கு அனுமதி வழங்குவதற்காக, மூன்று குழந்தைகளின் தாயிடம் பாலியல் இலஞ்சம் கோரி, அவரை திஸ்ஸமஹாராம பகுதியில் உள்ள விடுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்ற போது, பிரதிவாதி இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

பின்னர், இந்த சந்தேக நபருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

நீண்ட விசாரணைகளுக்குப் பிறகு தீர்ப்பை வழங்கிய மேல் நீதிமன்ற நீதிபதி, முறைப்பாட்டாளரால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதாக உத்தரவிட்டார்.

அதன்படி, இந்தத் தண்டனை விதிக்கப்படுவதாகவும் நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டார். (அ)

# சிறுவர் காப்பகத்தில் இருந்த 3 மாத குழந்தை உயிரிழப்பு!

கொழும்பு, மே. 10

பதுளை - பண்டாரவளை பிரதேசத்தில் உள்ள சிறுவர் காப்பகம் ஒன்றில் இருந்த 3 மாத குழந்தை ஒன்று திடீரென சுகயீனமுற்று உயிரிழந்துள்ளதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த குழந்தை திடீரென சுகயீனமுற்றுள்ள நிலையில் பண்டாரவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த குழந்தையின் சடலம் பிரேத பரிசோத னைக்காக பண்டாரவளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# சொன்னதைச் செய்திருந்தால் பிமல் பாராளுமன்றில் அழத்தேவையில்லை

## கீதநாத் காசிலிங்கம் சாடல்

கொழும்பு, மே. 10

மதுபானசாலை அனுமதிப் பட்டியலை வெளியிட்டிருந்தால், அமைச்சர் பிமல் ரத்தநாயக்க கசிப்பு விநியோகம் குறித்து பாராளுமன்றில் அழத்தேவையில்லை என பொதுஜன பெரமுன கட்சியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

வன்னி மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தேர்தலில் வெல்வதற்காக கசிப்பு விநியோகம் செய்துள்ளது எனும் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் கருத்துக் குறித்து பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-அமைச்சர் பிமல் ரத்நாயக்க தற்போது பாராளுமன்ற சிறப்புரிமையின் பின்னால் ஒளிந்து கொண்டு, வாக்குகளை வெல்ல தமிழ் கட்சிகள் கசிப்பு மற்றும் இலஞ்சம் வழங்குகிறார்கள் எனக் குற்றம் சுமத்துகிறார். ஆனால், இதே பிமல் ரத்நாயக்க சார்ந்த தேசிய மக்கள் சக்தி, கடந்த அரசின் கீழ் மதுபான அனுமதிகள் பெற்ற சில வடக்கு எம்பிக்களின் பட்டியலை வெளியிடப்போவதாக தேர்தலுக்கு முன் வாக்களித்தது.

இப்போது, அந்த பட்டியலை வெளியிடுவதை அவர் சார்ந்திருக்கும் தேசிய மக்கள் சக்தியே தடுக்கிறது.

குறித்த பட்டியல் வெளியாகியிருந்தால், இன்று பிமல் பாராளுமன்றத்தில் அழவேண்டிய நிலைக்கு வந்திருக்கமாட்டார். இன்னும் தாமதமாகிவிடவில்லை நீங்கள் வாக்குறுதி செய்தபடி அந்த பட்டியலை வெளியிடுங்கள்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 10.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.